Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU
National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 389

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 | யாழ்ப்பாணம், பிலவ புரட்டாசி 9 ஆம் நாள் | ரபி ஆகிர் 14 | (25-9-61) | திங்கட்கிழமை | இதழ் 191

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்–2 மதுரை

பாரதி காட்டிய வழி

# இலங்கை இன்று உப்பு இறக்குமதிசெய்வானேன்?

## ஆனையிறவு உப்பளத்தை அபிவிருத்தி செய்யாத பலன்

### பொருளாதார அபிவிருத்தி பற்றி வேலணையில் உடுப்பிட்டி மெம்பர் பேச்சு

வேலணை, ஞாயிறு

"ஆனையிறவு உப்பளத்தை அபிவிருத்தி செய்ய ஒரு கோடி ரூபாய் செலவழித்தால், வருடத்தில் அங்கு ஒரு 'கோடி டன் உப்பு கிடைக்குமென்று, ஐக்ய அரபு குடியரசிலிருந்து இங்கு வந்திருந்த நிபுணர்கள் யோசனை கூறினார்கள். ஆனால் அந்த புத்தியைக் கேளாமல் ஹம்பாந்தோட்டை உப்பளத்தை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் 30 கோடி ரூபாய் செலவழித்தது. இதன் பயன் என்ன? இப்போது வெளி நாடுகளிலிருந்து இலங்கை உப்பை இறக்குமதி செய்யவேண்டிய கண்றாவியான நிலைமை ஏற்பட்டுள்ளது"

என்றிவ்வாறு உடுப்பிட்டி மெம்பர் திரு. எம். சிவசிதம்பரம், வேலணையில் பாரதி இளைஞர் சங்க ஆதரவில் நேற்று மாலை நடைபெற்ற பாரதி விழாவில் கூறினார்.

திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:–

"வடக்கு, கிழக்குகடலோரங்களிலே விதவிதமான அரிய மீன்வகைகளிருப்பதாக ஜப்பானிய நிபுணர்கள் தெரிவித்துள்ளார்கள். ஆனாலும் வட மாகாணத்துக்கு ஒரு மீன்பிடி டிராலரை இன்னும் அரசாங்கம் வழங்கவில்லை. இப்பகுதியிலே முன்காலத்தில் பஞ்சு விளைந்து ஏற்றுமதியும் ஆகியிருக்கலாம். அதனால் தான் பருத்தித்துறை என்றபெயரும் ஏற்பட்டிருக்கவேண்டும். முன்னர் தமிழர் மலாயா, தென் பகுதி முதலிய இடங்களில் உத்தியோகத்துக்குச் சென்றனர். இனி அது முடியாது. ஆகவே புதிய நிலைமையை உணர்ந்து அதற்குத்தக்கபடி, பாரதியார் கூறிய பொருளாதார விடுதலைக்கான வழிவகைகளை ஊக்கத்துடனும், ஒற்றுமையுடனும் செய்யவேண்டும்.

சமூகத்தில் பாதிப்பேரான பெண்களை பொருளாதார அபிவிருத்திக்கான ஆக்கவேலைகளில்ஈடுபடச்செய்யவேண்டும்.

மரம் ஏறி பதநீர் எடுப்பது, மீன்பிடிப்பது போன்ற தொழில்கள் பொருளாதார விருத்திக்கு மிக முக்கியமானவை. சாதித்தொழில் என்று அவற்றை ஒதுக்கி அலட்சியப் படுத்தாமல், நாட்டு முன்னேற்றத்துக்கான எல்லாவகைத் தொழில்களிலும் உயர்வு தாழ்வு பாராமல் வாலிபர்கள் ஈடுபடமுன்வரவேண்டும். சமூகத்தில் ஒரு பகுதியினரை தாழ்த்தப் பட்டவர்களென்று ஒதுக்கி வேற்றுமைப்படுத்தக் கூடாதென்றும் பாரதியின் பெயரால் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றும் திரு. சிவசிதம்பரம் சொன்னார்.

## ஜனநாயக காங்கிரஸ் யாழ்ப்பாண கிளை

### புத்துயிரளிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கை ஜனநாயகக் காங்கிரஸின் யாழ்ப்பாணக் கிளைக்குப் புத்துயிரளிக்கும் நடவடிக்கைகள் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் இலங்கை ஜனநாயக காங்கிரஸ் கிளை ஸ்தாபனத்தை மீண்டும் புத்துயிரளித்துச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிகிறது. கடந்த சிலகாலமாக இது இயங்காதிருந்தது.

இலங்கை ஜனநாயக காங்கிரஸில் சில வருடங்களுக்கு முன் ஏற்பட்ட பிளவின் காரணமாக யாழ்ப்பாணக் கிளை ஸ்தாபனமும் இயங்காதிருந்தது.

இப்போது அந்த இரு கோஷ்டியினரும் சமரசமாகி ஒரே ஸ்தாபனத்துக்குள் ஒன்றுபட்டிருக்கிறார்கள். இலங்கை ஜனநாயககாங்கிரஸின் யாழ்ப்பாணக்கிளைத் தலைவரான டாக்டர் சாக்கோவும், செயலாளரான யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. நாராயணசாமி ஐயரும் இலங்கையைவிட்டு மிக விரைவில் தாயகம் செல்லவிருக்கிறார்கள் எனத் தெரிகிறது.

இச் சந்தர்ப்பத்தில் இங்குள்ள கிளையைக்கூட்டி புதிய நிர்வாகிகள் தேர்வை நடத்தவும் இந்த ஸ்தாபனத்துக்குப் புத்துயிர் அளிக்கவும் நடவடிக்கையெடுக்கப்பட்டு வருகிறது.

இதுபற்றி ஆலோசிப்பதற்காக இக் கிளையின் முக்கிய பிரமுகர்களைக்கொண்ட செயற்குழுநேற்றுமாலை, கே. கே. எஸ். வீதியிலுள்ள ஓர் கட்டடத்தில் கூடி ஆலோசனை செய்தது.

தலைவரும், உபதலைவரும் இந்தியா செல்வதால் புதிய தலைவராக திரு. வி. காந்திமதி நாதபிள்ளையும் உபதலைவராக திரு. டி. எஸ். ராமச்சந்திரபிள்ளையும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கமிட்டியை சீராக செயல் படுத்துவதற்காக திருவாளர்கள் வி. காந்திமதிநாதபிள்ளை, டி. எஸ். ராமச்சந்திரபிள்ளை, எஸ். சேதுராமலிங்கபிள்ளை ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

இந்தியாவின் வெள்ள நிவாரண நிதிக்கு ரூ. 300 உதவுவதென கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தேநீர் விருந்தொன்று முடிவில் நடைபெற்றது.

## தொழில் நுட்ப பயிற்சி வாரம் இன்று ஆரம்பமாகிறது

கொழும்பு, திங்கள்

இன்று தொழில் நுட்பப் பயிற்சி வாரம் ஆரம்பமாகிறது. மொரட்டுவைக் கட்டுபெடாவிலுள்ள தொழில் நுட்பப்பயிற்சிக் கல்லூரியில் கவர்னர்ஜெனரல் தொழில் நுட்பப்பயிற்சி வாரத்தை ஆரம்பித்து வைப்பார்.

தொழில் நுட்பப் பயிற்சி வாரக் கொண்டாட்டங்களில் பிரதமமந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் கல்விமந்திரி திரு. பதியுதீன் மாமூத்தும் கலந்துகொள்வார்கள். பல தனியார்தாபனங்களும் இதில் பங்குபற்றவிருக்கின்றன. இவ்வாரம் இலஙகை முழுவதிலும் பொருட்காட்சிகளும் கொண்டாட்டங்களும் நடைபெறும்.

காங்கேசன்துறை பட்டின சபை

## தலைவர்மீது நம்பிக்கை இல்லாப் பிரேரணை

### 4 அங்கத்தவர்கள் கடிதம்

காங்கேசன்துறை, ஞாயிறு

காங்கேசன்துறைப் பட்டின சபைத் தலைவர் திரு. வி. சதாசிவம் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டுவருவதற்கு நான்கு அங்கத்தவர்கள் முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர்.

பட்டின சபையின் முன்னாள் தலைவரும் முதலாம் வட்டார அங்கத்தவருமான திரு. எம். கார்த்திகேசு, மூன்றாம்வட்டார அங்கத்தவர் திரு. எஸ். இராசரத்தினம், ஐந்தாம் வட்டார அங்கத்தவர் திரு. எஸ். சிவனடியார், ஆறாம் வட்டார அங்கத்தவர் திரு. பி. இமானுவேல் ஆகிய நால்வரும் கைச்சாத்திட்டு உதவி ஸ்தலஸ்தாபனக் கமிஷனருக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் சபையின் தலைவர் பதவியிலிருந்து திரு. சதாசிவத்தை நீக்கவேண்டுமென்று கோரியுள்ளதாகத் தெரிகிறது. இதற்கு அவர்கள் பல காரணங்களையும் அதில் தெரிவித்துள்ளனராம்.

## 'தாராசிங் உடல் நிலை கவலைக்கிடம்'

### புதல்விக்கு நேரு கடிதம்

அமிர்தசரஸ், செப். 24

பஞ்சாபி சுபா கோரிக்கைக்காக உண்ணாவிரதமிருக்கும் மாஸ்டர் தாராசிங் தமது உண்ணாவிரதத்தை விட்டுவிடுவாரென தாம் நம்புவதாக பிரதமர் ஸ்ரீ நேரு, மாஸ்டர் தாராசிங்கின் புதல்விக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நிருபர்கள் மகாநாட்டில் சமீபத்தில் தாம் சொன்ன வார்த்தைகள் தவறான முறையில் அர்த்தம் செய்யப்பட்டுள்ளதாக ஸ்ரீ நேரு அந்த கடிதத்தில தெரிவித்துள்ளார்.

மாஸ்டர் தாராசிங்கின் உண்ணாவிரதத்தின் உண்மைத் தன்மையைச் சந்தேகிக்கும் பிரச்னையே கிடையாது" என்று பிரதமர் சுட்டிக் காட்டியுள்ளார்.

**உடல்நிலை மிகமோசம்**

இன்று 41-வது தினமாக உண்ணாவிரதமிருக்கும் மாஸ்டர் தாராசிங்கின் உடல் நிலை மிக மோசமடைந்துள்ளதாகவும் நிலைமை கவலையளிப்பதாகவும் கடைசியாக வெளியான வைத்திய அறிக்கையொன்று கூறுகிறது.

மாஸ்டர் தாராசிங்குக்கு எதிராக உண்ணாவிரதமிருக்கும் யோகிராவ் சூர்யதேவின் உடல் நிலையும் மோமடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

—

## இன்று

இன்று மாலை 4-30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மைதானத்தில், இந்தியாவிலிருந்து வந்துள்ள மகாராஷ்டிரா ஹாக்கிகோஷ்டிக்கும் யாழ்ப்பாணம் ஹாக்கிகோஷ்டிக்குமிடையே ஹாக்கி விளையாட்டுப் போட்டி ஒன்று நடைபெறும்.

## பண்டாரநாயகா ஞாபகார்த்த தினம்

### நாடு முழுவதும் 2 நிமிஷம் மௌன அஞ்சலி

கொழும்பு, ஞாயிறு

வருகிற 26 ம் தேதி நாடு முழுவதும் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த தினம் அனுஷ்டிக்கப்படும். காலை 7-55 க்கு சகல பகுதிகளிலும் 2 நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்படும். கால்பேஸ் மைதானத்தில் பீரங்கிப் படை வேட்டுகள் தீர்க்கும். கோவில்கள், தேவாலயங்கள், மசூதிகள் ஆகியவற்றிலும் பிரார்த்தனைகள் நடைபெறும். காலை7-55க்கு2நிமிஷம்மௌனம் அனுஷ்டிக்கப்படும்போது வீதிகளிலுள்ளவாகனங்களை பொலிசார் நிறுத்துவார்கள். கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்க விடப்படும். சகல மதஸ்தாபனக் குருமார்களும் இத்தினத்தைக் கொண்டாடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளார்கள். நாளை இரவு முழுவதும் ஹொரகொல்லையில் 'பிரித்' ஓதப்படும்.

கலகெதர தொகுதியில் பிற்போக்கான வட்டாரத்தில் புதிய பாதை ஒன்றை அமைக்கும் வேலையும் நடைபெறும். அன்று அரசாங்க வங்கி விடுமுறை தினமாகும். ஹொரகொல்லை வைபவத்துக்கு கவர்னர் ஜெனரல் சர் ஒலிவர் குணதிலகா தலைமை வகிப்பார். இலங்கை வானொலி இவ்வைபவத்தை மும்மொழிகளிலும் ஒலிபரப்ப விசேஷ ஏற்பாடுகள் செய்திருக்கிறது.




உ
சிவமயம்

**ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தான கோடியர்ச்சனை விஞ்ஞாபனம்**

ஆரம்ப தினம்: 23—10—61
பூர்த்தி தினம்: 5—2—62

இந்த அர்ச்சனையில் யந்திரத் தகடு வைத்து பூஜை செய்து கொடுக்கப்படும்.

சி. பாலசுப்ரமணியக் குருக்கள்.

# ‘சிவகுரு குத்தியதாகச் சொன்னார்’
## நாவாந்துறை கொலைவழக்கில் பொலிஸ்காரர் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
நாவாந்துறைகொலைவழக்கு, நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா முன்னிலையில் இரண்டாவது நாளாக கடந்த வெள்ளிக்கிமை மீண்டும் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டபோது, தகவல் புத்தகத்தின் பகுதிகள் எதிரி தரப்பினருக்கு இன்னமும் கிடைக்கவில்லையென எதிரி தரப்பு வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் நீதியரசரிடம் முறையிட்டார்.

சென்ற பெப்ரவரி மாதம் 21ம் திகதி நாவாந்துறை பீச் ரோட்டில் வசிக்கும் முருகுப்பிள்ளை குலவீரசிங்கம் என்பரைக் கொலை செய்ததாக சின்னப்பன் சிவகுரு என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கு விசாரணையில் பொலிஸ்இன்ஸ்பெக்டர் திரு. எம். வல்லிபுரம் சாட்சியமளிக்கையில், குறுக்கு விசாரணையின் போது எதிரி தரப்பு வழக்கறிஞர் இதனைச் சுட்டிக்காட்டினர்.

நீதியரசர் டாக்டர் தம்பையா தம்மிடமுள்ள தகவல் புத்தகப் பகுதிகளை திரு. சண்முகநாதனுக்குக் கொடுத்துதவுவதாக முன் வந்தாரெனினும் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. நகுலேஸ்வரன் தமது தகவல் புத்தகப் பகுதிகளைக் கொடுத்துதவினர்.

இவ்வழக்கில் முக்கிய சாட்சியான தங்கம்மா திருப்பி அழைக்கப்பட்டு மீண்டும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபின் பொலிஸ் கான்ஸ்டபிள் குமாரதீனும் மிஸ்கின் சாகிப், தம்பி ஹக்சன் என்னும் மொகமத்கல்தான், கோணமலை அருணசலம் ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

சம்புவம் நடைபெற்ற இடத்தின் படத்தை வரைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. ஜே. குமாரதீனின் சாட்சியம் பதிவு செய்து முடிந்ததும் 27ம் திகதி புதன்கிழமை பகல் 11-30 மணியளவில் சம்பவம் நடைபெற்ற இடத்தைப் போய்ப் பார்ப்பதென நீதியரசர் தெரிவித்தார்.

பிராசிக்கூஷன் தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பி. நகுலேஸ்வரன் ஆஜரானர். திரு. ஆர். விசுவநாதன், திரு. ஜே. டபிள்யூ. சைமன் ஆகியோரின் அனுசரணையுடன் திரு. டி. எஸ். ஆனந்த குமாரசாமியுடன் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் எதிரி தரப்பில் ஆஜரானர்.

பொலிஸ் கான்ஸ்டபிள் குமாரதீன் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று மாலை 6 மணிக்குப்பின் நான் கடமையில் இருக்கவில்லை. பொலிஸ் குற்றப் பகுதியில் சில கடிதங்களைக் கவனித்கொண்டிருந்தேன். நான் விவாகமாகதவன். பொலிஸ் கட்டிடத்தில் வசித்து வருகிறேன. மிஸ்கின் சாகிப் என்பவர் இரவு 8-15 மணியளவில் பொலிஸ் நிலையத்துக்கு வந்தார். காயமடைந்த ஒருவரைக் காரில் கொண்டுவந்திருப்பதாக அவர் என்னிடம் கூறினர். அதே காரில் நான் அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றேன். நான் சாதாரண உடையில் பனியனும் அணிந்திருந்தேன். தங்கம்மாவும் கார்ச்சாரதியும் காரில் இருந்தனர். நான் காரின் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்து இறந்தவரின் தலையை மடியில் வைத்துக்கொண்டிருந்தேன். அவர் சுய உணர்வுடன் இருந்தார். நான் பிரயாணத்தின் போது அவருடன் பேசினேன். என்ன நடந்ததென்று நான் கேட்டதற்கு சிவகுரு குத்திவிட்டார் என இறந்தவர் பதிலளித்தார். ஆஸ்பத்திரிக்குள் எடுத்துச் செல்வதற்காக நான் காரை விட்டுவெளியே இறங்கினேன். அவரைத் தூக்கிக்கொண்டிருக்கையில் டாக்டர் வந்து அவர் இறந்துபோனதாக அறிவித்தார். நான் ஆஸ்பத்திரியில் சடலத்தை ஒப்படைத்து விட்டு, எதிரி வீட்டுக்கு அதே காரில் விரைந்து சென்றேன். நாவாந்துறையிலுள்ள அவரது வீட்டு வராந்தையில் எதிரி அமர்ந்திருப்பதைக் கண்டேன். நான் அவரை பிடித்து எனது காவலில் வைத்துக்கொண்கொண்டேன். நான் அவரது வளவைச் சோதித்தபோது வீட்டுக்குப் பின்பக்கமாக தூர்வையான நிலப்பகுதியிருப்பதைக் கண்டேன். மண்ணைக் கிண்டிப் பார்த்தபோது கத்தி ஒன்று அதற்குள் இருப்பதைக் கண்டு எடுத்தேன். நான் எதிரியுடன் ஆஸ்பத்திரிக்கு வந்தேன். எதிரியை சட்ட வைத்திய அதிகாரி முன் ஆஜர் செய்வதற்காக ஆஸ்பத்திரி டிக்கட் ஒன்றைப் பெற்றுக்கொண்டு உள்ளே சென்றேன். அவர் அங்கு இல்லாதபடியால் எதிரியையும் கத்தியையும் பொலிஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டர் திரு. எம். வல்லிபுரத்திடம் ஒப்படைத்தேன்.

இந் நிலையில் மேல் விசாரணை இம்மாதம் 27ம் திகதி புதன் கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## விசேஷ பஸ்

கொழும்பு, ஞாயிறு
முன்னாள் இலங்கைப் பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் இரண்டாவ நினைவுது தினத்தை முன்னிட்டு, நாளை செவ்வாய்க்கிழமை ஹொரகொல்லைக்கு விசேஷ ‘பஸ்’கள் ஓடும்.

இது சம்பந்தமாக சங்கபோதி பாடசாலையில் ஒரு தற்காலிக இ. போ. ச. காரியாலயம் திறக்கப்படும்.

## இலங்கை திரும்பினர்

கொழும்பு, ஞாயிறு
ஆலோசனைக்காக கனடாவுக்குச் சென்றிருந்த இலங்கையின் கனடா ஹைகமிஷனர் திரு. ஜேம்ஸ் ஜோர்ஜ் தமது மனைவி குழந்தைகளுடன் இலங்கை திரும்பினர்.

## பெரியாருக்கு தங்க கிரீடம்

திருச்சி, செப். 24
ஈ. வெ. ராமசாமிப் பெரியாருக்கு தங்கக் கிரீடம் சூட்ட திருச்சி திராவிடக் கழகத்தினர் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

ஈ. வெ. ரா. பெரியாரின் 83-வது பிறந்ததினப் பரிசாக இக்கிரீடம் வழங்கப்படும்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்ளடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

**வைத்தியர் பரிபூரணுநந்தர்,**
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

## ஆயுள்வேத அரிய சாதனை

புற்று நோய்க்கு ‘யோகீஸ்வர ரசம்’ தமிழ்வைத்தியமுறைப்படி புற்று நோயை வேரறுக்க முடியுமென்பதை செயல்மூலம் நிருபிக்கப்பட்டுள்ளது. மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டோர் எம்மிடம் சிகிச்சை பெற்றுக் குணமடைநதுளர். தாய்க்குலத்தாருக்கு ஒரு வரப்பிரசாதமாக கிடைத்துள்ள அரிய மருந்து பெரும்பாடு நிவாரணி.” தாமதமின்றிக் கலந்தாலோசியுங்கள்.

**பொ. செல்லையா**
ஆயுள்வேத வைத்தியர்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

## காமெரா திருத்துதல்

உங்கள் ‘காமெரா’க்கள் எதுவாயிருந்தாலும் உத்தரவாதத்துடன் பழுது பார்த்துத் திருத்துவதற்கு, 213, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## ஆசிரியருக்கு பிரிவுபசாரம்

துணுக்காய், ஞாயிறு
துணுக்காய் பகுதியிலுள்ள உயிலங்குளம் அரசினர் பாடசாலையிலிருந்து கிளிநொச்சி அரசினர் பாடசாலைக்கு மாற்றலாகிச் செல்லும் ஆசிரியர் திரு. சி. கோவிந்தபிள்ளைக்கு சென்ற சனிக்கிழமை உயிலங்குளம் ஆசிரியர்கள், கிராமாதிகாரி, பெற்ருேர்கள், மாணவ மாணவிகள் இவர்கள் ஒரு பிரிவு உபசாரம் நடத்தினர். சென்ற இரண்டரை ஆண்டுகளாக ஆசிரியர்செய்த சேவைகளைப் பலர் பாராட்டி, உபசாரப்பத்திரம் வாசித்தளித்தனர். சிற்றுண்டியுடன் விழா இனிது முடிவடைந்தது.

## ஹங்கேரியில் மொரார்ஜி

புடாபெஸ்ட், செப். 22
ஹங்கேரி அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இந்தியநிதி மந்திரி திரு. மொரார்ஜி தேசாய் இன்று ஹங்கேரியின் தலைநகரான புடாபெஸ்ட் வந்து சேர்ந்தார்.

## ரஷ்யா இணங்கும்?

நியுயோர்க், செப். 24
திரு. ஹமர்ஷீல்டின் மரணத்தினல் காலியாகவுள்ள ஐ. நா. பொதுக் காரியதரிசி பதவிக்கு, ஒருவரை தற்காலிகமாகத் தெரிவு செய்வுதற்கு சோவியத் யூனியன் சம்மதமளிக்குமென நியுயோர்க்கில் கருதப்படுகிறது.

பொதுக் காரியதரிசி ஒருவருக்குப் பதிலாக மேற்கு, கிழக்கு, நடுநிலைமை நாடுகளைச் சேர்ந்த மூவரைக் கொண்ட நிர்வாகக் குழு பொதுக் காரியதரிசியின் வேலையைச் செய்யவேண்டுமென்று சோவியத் யூனியன்கோரி வருவது குறிபபிடத்தக்கது.

## அர்ச்சகர் சங்க மகாநாடு

சென்னை, செப். 24
தென் இந்திய அர்ச்சகர் சங்கத்தின் 13 வது வருடாந்த மகாநாடு செப்டம்பர் மாதம் 30-ந் திகதி சனிக்கிழமை காலை 10-30 மணிக்கு சென்னை உள்நாட்டு மந்திரி திரு. எம். பக்தவத்சலத்தினல் ஆரம்பித்து வைக்கப்படும். சென்னை ஆழ்வாரப் பேட்டையிலுள்ள எதிராஜ கல்யாண மந்திரத்தில் இம் மகாநாடு மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெறும்.

## கடும் மழை

மத்துகம, ஞாயிறு
சென்ற சில வாரங்களாக இங்கு பெய்த பெரு மழை காரணமாக, விவசாயிகளும் ரப்பர் பால் எடுப்பவர்களும் கடுமையாகப்பாதிக்கப்பட்டுள்ளனர். அநேக வீதிகளும் இம் மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன.

## சாரணர் முகாம்

தங்காலை, ஞாயிறு
றேகாவ மகா வித்தியாலயத்தில் சாரணர்கள் மூன்று நாள் முகாமிட்டனர். இச்சாரணர்களுக்கு தங்காலை,ப் பாடசாலை வித்தியாதரிசி திரு. எல். பி. டி. ஜயசிங்கி நற் சாட்சிப்பத்திரங்களை வழங்கினர். றேகாவ மகா வித்தியாலய தலைமையாசிரியர் திரு. டி. குணதிலகா இம் முகாமுக்குத் தலைமை வகித்தார்.

# ‘உரிமைகளைப் பாதுகாக்க அரசாங்கஊழியர் முயலவேண்டும்’

கொழும்பு, ஞாயிறு
“அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பக்கபலமாக இருந்தவர்கள் சர்வேயர்களே. அவர்கள் தமது பொறுப்பையுணர்ந்து மேலும் கடமையாற்றுவார்கள் என்பதை நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.”

இவ்வாறு அரசாங்க சர்வேயர்களின் வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் சர்வேயர் பொது பதில் அதிகாரி திரு. என். கார்த்திகேசு கூறினர். அவர் மேலும் கூறியதாவது:

‘நாட்டின் அபிவிருத்தி வேலைகளை ஆரம்பித்து வைப்பதில் சர்வேயர்களுக்கு அதிக பங்குண்டு. அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றிகரமாக உருவாகுவதற்கு சர்வேயர்கள் தம்மால் இயன்ற உதவி செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றனர்.”

அரசாங்க சர்வேயர்கள் சங்கத் தலைவர் திரு. ஏ. பி. எஸ். குணவர்த்தன பேசுகையில் அரசாங்க ஊழியர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து உழைத்துத் தமது உரிமைகளுக்காக முயற்சிக்க வேண்டியகாலம் வந்துவிட்டது எனக் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:

தனிப்பட்ட தொழிற் சங்கங்களால் ஊழியர்களது உரிமைமைகளைச் சரிவரப் பெற முடியாது அரசாங்க ஊழியர்கள் யாவரும் ஒருமித்துத் தமது உரிமைகளுக்குப் போராடக்கூடிய ஸ்தாபனம்ஒன்றுநிறுவப்படல் வேண்டும். அப்போதுதான் எமது உரிமைகளுக்குப் போராடுவதற்குப் போதிய பலம் ஏற்படும். சம்பளக் கமிஷனின் அறிக்கை எமது வாழ்க்கைப் படியில் தலையிடுவதொன்ருகும். அபிவிருத்தி வரி அரசாங்க ஊழியர்கள் அனைவருக்கும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.”

அரசாங்க சேவையாளர்கள், அரசாங்கத்துடன் இலகுவாகப் பேச்சுவார்த்தைகளை நடாத்திக்கொள்வதற்கு ஏற்ற வசதிகளை அரசாங்க ஊழியர்கள் ஏற்பாடு செய்யவேண்டும் எனத் திரு. குணவர்த்தன ஊழியர்களுக்கு வலியுறுத்தினர்.

## நமது நூல் நிலையம்

**ஓவியக்கலை:** ஆசிரியர்: ஆ. தம்பித்துரை. பதிப்பாசிரியர்: கனக. செந்திநாதன். **வெளியீடு:**- குரும்பசிட்டி சன்மார்க்கசபை, குரும்பசிட்டி. **விலை:**- ரூ. 1.

“கலை முதலும் முடிவுமற்றது. அகன்றது ஆழ்ந்தது. இந்த ஓவியக் கலையின் பரந்தகடலை ‘பூனை நக்குபுக்கென’ நுழைந்திருப்பதாக” ஆசிரியர் தமது முகவுரையில் தன்னடக்கத்துடன் கூறியுள்ளார்.

ஓவியத்தின் தன்மையை, கலைத்துவ நிலையை, அதன் உட்பிரிவுகளையெல்லாம் ஓவியக்கலைமூலம்கோடிட்டுக் காட்டிச் செய்வதோடு அதன் அடிப்படையான தத்துவத்தையும் இந்நூலில் விளக்கியிருக்கின்ருர். ஆசிரியர் மேனுட்டுக் கலையையும் உற்றுணர்ந்து பதினைந்து அத்தியாயங்களுக்குள் கூற முற்பட்டிருப்பது சுருங்கக்கூறி விளங்க வைப்பதாக இருந்தாலும் பாற்கடல் போன்ற கலையை அத்துணை இலகுவாகப் புகுத்துவது மிகச் சிரமமான முயற்சியேயாகும்.

ஓவியம் பற்றிச் சாதாரண வாசகர்களும் முக்கியமாகக் கல்லூரிகளிலுள்ள உயர்தர வகுப்பு மாணவர்களும் ஆரம்ப அறிவைப் பெறவேண்டுமென்ற புத்தகத்தின் கருப்பொருளிலும் பிரதிபலிக்கின்றது. எளிமையும் விளக்கமும் தோன்ற எடுத்துக்கொண்ட பொருளை சரள நடையில் விளக்கியுள்ளார். ஆனல் ஓவியக்கலை என்னும் பொருள் பற்றிய கட்டுரையை வளர்த்துச் செல்வதற்குரிய கவனம் விளக்க அளவைவிட மேம்படுகின்றது. எடுத்துக்காட்டுதலுக்காகத் தேர்ந்த கவிதைகள் தெரிவு மிக நன்று.

ஓவியக் கண்கள் என்ற அத்தியாயம் மிகச் சிறிதாகவிருந்தாலும் அதனுள் ஓவியம் பிறந்த கதைகளைக் கூறுவதனல் ஓவியங் கற்கும் மாணவர்களுக்கு அவை கவர்ச்சியை அளிக்கும். இவ்வாசிரியர் அமைத்துள்ள அட்டைப் படம் அழகுற அமைந்துள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)

# சிலரின் உடலில் குண்டுகள் காணப்பட்டன

## ஹமர்ஷீல்ட் விமானவிபத்துபற்றி ஆராயும் குழுத் தலைவர் தகவல்

அன்டோலா, செப். 24

ஐ. நா. பொதுக் காரியதரிசி திரு. டாக் ஹமர்ஷீல்டின் மரணத்துக்குக் காரணமாகவிருந்த விமான விபத்தில் உயிரிழந்த மற்றவர்கள் சிலரின் உடலில் துப்பாக்கிக் குண்டுகள் சில இருக்கக் காணப்பட்டதாக விபத்துபற்றி விசாரணை நடத்தும் ரொடீஷிய அரசாங்கம் நியமித்த விசாரணைக் கமிஷனின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்தத் துப்பாக்கிக் குண்டுகள் வெளியிலிருந்து சுடப்பட்டதாகக் கருத முடியாதென்றும் அவர் கூறியுள்ளார் அந்த விமானத்தில் ஆயுதங்களும் வெடிமருந்துகளும் எடுத்துச் செல்லப்பட்டதால் விமானத்துக்கு விபத்து ஏற்பட்டதும் வெடிமருந்துகளும் ஆயுதங்களும் வெடித்து அதன் விளைவாக இக்குண்டுகள் அதில் பிரயாணம் செய்தவர்களின் உடலில் பாய்ந்திருக்கக் கூடுமெனவும் அவர் விளக்கம் தெரிவித்துள்ளார்.

வட ரொடீஷிய அரசாங்கம் நியமித்த விசாரணைக் கமிஷன் தனது விசாரணையை இன்னும் பூர்த்தி செய்யவில்லை. விசாரணை முடிவடைந்ததும் அது தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும்.

அந்த விமான விபத்தில் உயிர் தப்பியிருந்த ஒரேயொரு அமெரிக்கரும் காலமாகிவிட்டார்.

---

புதுடில்லி, செப். 22

சோவியத்தின் முதலாவது வானவெளி வீரர் மேஜர் ககாரின் அடுத்த மாத இறுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்து நான்கு தினங்கள் தங்கியிருப்பார்.

## காங்கோ அரசாங்கம் அதிருப்தி

லியப்போல்ட்வில்லி, செப். 24

ஐ. நா. பிரதிநிதி திரு. கியாரியம் கடாங்கா அதிபர் ஷோம்பேயும் சமீபத்தில் செய்து கொண்ட உடன்படிக்கை பற்றி காங்கோ மத்திய அரசாங்க பார்லிமெண்ட் அதிருப்தி தெரிவித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இத்தீர்மானத்தைக் காங்கோவிலுள்ள ஐ. நா. தலைமைப் பிரதிநிதிக்கு காங்கோ பிரதமர் திரு. அடௌலா அனுப்பி வைத்துள்ளார்.

கடாங்காவை காங்கோவுடன் ஒன்று சேர்ப்பதற்கு எங்கிருந்து என்ன உதவி கிடைத்தாலும் அதை ஏற்றுக் கொள்ளும் அதிகாரத்தை மத்திய அரசாங்கத்துக்கு காங்கோ பார்லிமெண்ட் அளித்துள்ளது.

---

## ஆஸ்பத்திரியில் ம. பொ. சி.

சென்னை, செப். 24

தமிழரசுக் கழகத் தலைவர் திரு. மா. பொ. சிவஞானம் இப்பொழுது ஆஸ்பத்திரியிலிருக்கிறார். வயிற்றுவலி காரணமாக அவருக்கு சத்திர சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இன்னும் 15 தினங்கள் அவர் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டும். தம்மை யாரும் வந்து பார்க்க வேண்டாமென அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## இறுதிச் சடங்கில் திருமதி விஜயலட்சுமி கலந்துகொள்வார்

ஸ்டாக்ஹோம், செப். 24

விமான விபத்தில் உயிர் நீத்த ஐ. நா. பொதுக்காரியதரிசி திரு. டாக் ஹமர்ஷீல்டின் பூதவுடல் இம்மாதம் 29-ந் திகதி வெள்ளிக்கிழமை அவரது தாயகமான சுவீடனின் தலைநகர் ஸ்டாக்ஹோமில் நல்லடக்கம் செய்யப்படும். இச்சடங்குகளில் பாரதத்தின் சார்பில் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் கலந்துகொள்வார். திருமதி விஜயலட்சுமிபண்டிட் முன்பு ஐ. நா. மகாசபைத் தலைவராகப் பணியாற்றியவர்.

---

## பாரதத்தின் சமாதானப் பணி

### கென்னடி மகிழ்ச்சி

வாஷிங்டன், செப். 22

அமெரிக்காவில் இந்தியஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள திரு. பி. கே. நேரு தமது நியமனப் பத்திரத்தை ஜனாதிபதி கென்னடியிடம் முறைப்படி சமர்ப்பித்தார்.

திரு. பி. கே. நேருவை வரவேற்று ஜனாதிபதி கென்னடி பேசுகையில் உலக சமாதானத்துக்காக இந்தியா உண்மையாக உழைத்துவருவது தமக்கு மகிழ்ச்சியளிக்கிறதென்றும் இந்தியாவுக்கு அமெரிக்கா தொடர்ந்து பொருளாதார உதவி அளித்து வருமென்றும் இந்த உதவி ஆசியாவிலும் உலகிலும் சமாதானத்தை ஏற்படுதத இந்தியா உழைப்பதற்கு உதவி புரியுமென்றும் கூறினர்.

---

## வேலை நிறுத்தம் முடிவு

அக்ரா, செப். 22

கானா அரசாங்கத்தின் சிக்கனத் திட்டத்தை எதிர்த்து வேலை நிறுத்தம் செய்து வந்த துறைமுக ரயில்வே தொழிலாளர் இன்று வேலைக்குத் திரும்பினர்.

# ஐ. நா. பிரதிநிதிகளுடன் ஷோம்பே சந்திப்பு

## காங்கோ பிரதிநிதிகளும் கலந்துகொள்வர்

அன்டோலா, செப். 22

ஐ. நா. அதிகாரிகளும் கடாங்கா அதிபர் ஷோம்பேயும் வெகுவிரைவில் அன்டோலாவில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவர். இப்பேச்சுவார்த்தைகளில் காங்கோ மத்திய அரசாங்க பிரதிநிதிகளும் கலந்துகொள்வார்களென்று அறிவிக்கப்படுகிறது.

காங்கோ மத்திய அரசாங்கப் பிரதமர் திரு. அடௌலாவை லியப்போல்ட்வில்லியைத் தவிர காங்கோவில்வேறு எந்த இடத்திலும் சந்தித்துப் பேசுவதற்குத் தாம் தயாராய் இருப்பதாக திரு. ஷோம்பே தெரிவித்ததாகவும் ஆனல் காங்கோவுக்கு வெளியே ஒரு இடத்தில் சந்திப்பதுதான் நல்லதென்று கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காங்கோ மத்திய அரசாங்கத்தினருடன் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தி காங்கோ கடாங்காப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளும்படி திரு. ஷோம்பேக்கு ஐ. நா. பிரதிநிதி திரு. கியாரி கூறியிருந்தாராம்.

தாமும் ஷோம்பேயும் பேச்சுவார்த்தை நடத்தி செய்து கொண்ட சண்டை நிறுத்த உடன்படிக்கைக்கும் அரசியல் பிரச்சினைக்கும் சிறிதும் தொடர்பு கிடையாதென்றும் அது படை நடவடிக்கை சம்பந்தப்பட்டதென்றும் திரு. கியாரி தெரிவித்துள்ளார்.

ஐ. நா. பாதுகாப்புச் சபை சென்ற பெப்ரவரி மாதத்தில் காங்கோ சம்பந்தமாக நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையிலேயே காங்கோவில் ஐ. நா. நடவடிக்கை எடுத்து வருகிறதென்றும் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் இன்னும் அமுலிலிருக்கிறதென்றும் திரு. கியாரி கூறினர்.

### ஷோம்பேயை ஒழிக்கும் நோக்கமில்லை

ஆபிரிக்க விவகாரங்களுக்கான அமெரிக்க துணைமந்திரி திரு. வில்லியம்ஸ் ஒரு கூட்டத்தில் பேசுகையில் கடாங்காவை காங்கோவுடன் இணைத்து காங்கோவின் ஒருமைப்பாட்டை உறுதி செய்யும் ஐ. நா. பாதுகாப்புச் சபைத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டியதவசியமென்றார்.

திரு. ஷோம்பேயை ஒழித்துக்கட்டும் நோக்கம் எங்களுக்கு இல்லை. அவர் மீண்டும் அரசியல் அரங்கில் இடம்பெற வேண்டுமென்பதே எங்கள் விருப்பம் என்று திரு. வில்லியம்ஸ் கூறினர்.

### பிரிட்டிஷ் அழிக்கை


காங்கோவுடன் கடாங்காவும் இணைந்து ஒரே காங்கோவாக இருக்க வேண்டுமென்பதே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் விருப்பமென்றும் இந்த நோக்கத்துக்கு பிரிட்டன் உதவியளித்துவருவதாகவும் ஆனல் இந்த நோக்கத்தை அடைய சமாதானமான வழியையும் சட்டபூர்வமான முறையையும் தான் பின்பற்ற வேண்டுமென்றும் பிரிட்டிஷ் அரசாங்கம் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## தலைவரைத் தாக்கினர்

நைரோபி, செப். 22

கென்யா ஆபிரிக்கத் தலைவர்களில் ஒருவரான ஒடிங்கா என்பவர் இன்று நைரோபி வீதியில் தாக்கப்பட்டார். இது சம்பந்தமாக ஒரு இளைஞர் பொலிஸ் பாதுகாப்பில் எடுத்துச் செல்லப்பட்டார். இச்சம்பவத்தை திரு. டொம்மொபோயா கண்டித்தார்.





சமீபத்தில் நடைபெற்ற நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழாவிலே தேவஸ்தான அதிபரின் மேற்பார்வையில் தொண்டாற்றிய சைவசமயாசார தேவஸ்தான தொண்டர்படையினரை மேலேயுள்ள படத்திலும், அகில இலங்கைப் பொதுஜனசேவைச் சங்க ஆதரவில் கடமையாற்றிய ஸ்ரீ முருகன் தொண்டர் படையினர் பொலிசார் வித்தியாபதி அதிகாரியுடன் அமர்ந்துள்ளதைக்கீழுள்ள படத்திலும் காணலாம்.

### மணிவாக்கு

குறைகளில் எல்லாம் பெரிய குறை யாது? குறையிருந்தும் குறையிருப்பதாக உணராததே.

—கார்லைல்

ஈழநாடு
EELA NADU
யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு புரட்டாசி மீ 9 வ. (25-9-61)
EEL NADU: National Tamil Da y Post Box 49, Jaffna
Telegarms EELA NADU Jaffna
Phone: 389.

## பார்லிமெண்டின் பல குறைகள்

சென்ற வெள்ளிக்கிழமையன்று பார்லிமெண்ட் சபையிலே இருபது மெம்பர்கள் கூட இல்லாததால் சபை கூடவே முடியாமல் ஒத்திவைக்கப்பட வேண்டியேற்பட்டது. இது பெரியதோர் குறையும் வெட்கக்கேடுமாகும்.

இம்மாத இறுதிக்குள்ளாக அவசரமாக பல உபமான்யங்கள் பார்லிமெண்டின் அங்கீகாரத்தைப் பெறவேண்டியுள்ளன. அப்படி இருந்தும், சிறப்பாக மந்திரிகளும் அரசாங்கக் கட்சி மெம்பர்களும் கூட போதிய அளவு வராமற் போய் கூட்டத்தையே புதன்கிழமை வரை ஒத்திவைக்கப்பட நேரிட்டதை பார்க்கையில் சபையைப் பற்றி பொதுவாக மெம்பர்களிடையே எவ்வளவு அசிரத்தையும் கவலையீனமும் நிலவுகிறதென்பது விளங்கும்.

இதை நன்குணர்ந்த பிரதம மந்திரி எட்டு அமைச்சர்களுக்கும் எழுதியுள்ள கடிதத்தில், இவ்விதநிலைமை மிகவும் கவலை அளிப்பதாயும், இது பெரிய குறையென்றும், சிறப்பாக மந்திரிகள் சபையில் வந்திருக்க வேண்டுமென்றும், இனி இவ்விதமான ஒரு குறை ஏற்படாதென்றும் சரியாக அறிவுறுத்தியுள்ளார். இதன் பிறகாவது இவ்வித அவலநிலைஏற்படாமல் அரசாங்கக் கட்சியினர் பார்த்துக் கொள்வாரென்றே நம்பப்படுகின்றது.

ஜனநாயகத்துக்கு உயிர் நிலையம் ஜனப்பிரதிநிதிகள் சபை எனப்படும்பார்லிமெண்ட்தான். இச்சபை சரிவர நடைபெற்ருலே, ஜனநாயகமும் வெற்றி பெற்று மக்களும் நல்வாழ்வு வாழமுடியும். ஆகவே பொது மக்கள் பார்லிமெண்டிலே நடப்பவற்றை வெகு ஆவலுடனும் கவலையுடனும் கவனித்து வருகின்றனர். தங்கள் பிரதிநிதிகள் என்ன பேசுகின்றனர்! அரசாங்கத்தின் கருத்தென்ன? தங்களை பாதிக்கக்கூடிய சட்ட திட்டங்கள் ஏதும் வருகின்றனவா? என்பவற்றை அவ்வப்போது அறிந்து கொள்ளவும் மக்களிடையே அதிக அக்கரையுள்ளது. பத்திரிகைகளோ, சபையில் நடப்பவற்றின் சுருக்கத்தையே பிரசுரிக்கின்றன. பூரா விபரங்களும் 'ஹன் சார்ட்' எனப்படும் பார்லிமெண்ட் பிரசுரத்திலேயே பார்த்துத் தெரிந்துகொள்ளவேண்டியுள்ளது. ஆனல் இப்போது வெளியிடப்படும் 'ஹன் சார்ட்'டில் பெரும்பாலும் பேச்சுக்களெல்லாம் சிங்களத்திலேயே வெளியாகின்றன. சிங்களம் தெரியாத மக்கள் கண்ணிருந்தும் திடீரெனக் குருடர்களாக்கப்பட்டுள்ளனர். இதே போல் ஆங்கிலம், தமிழ் இவை தெரியாத மக்களுக்கு அம்மொழிகளில் பிரசுரமாகியுள்ளவை தெரியா.

இவ்வித நிலைமையை திருப்தியானதென்று கூறமுடியாது. இதுவும் ஒரு பெரிய குறை. ஜனநாயக வளர்ச்சிக்கு பொது மக்கள் அரசியல் அறிவுடன் கூடியவர்களாகவும், பார்லிமெண்டில் நடப்பவற்றை தெரிந்துகொள்ளவும் வசதிகள் இருக்க வேண்டும். பார்லிமெண்ட் மெம்பர்களின் வசதிக்காக மூன்று மொழிகளிலும் சபை நிகழ்ச்சிகள் மொழி

# இலங்கைச் சரித்திரத்தில் மிக முக்கிய சம்பவம்

## அரசியலைத் திருத்த பார்லிமெண்ட் கமிட்டி நியமனம்

### சமூக ஒற்றுமையே சகஜநிலை ஏற்படுத்த வழியாகும்

— திரு. எஸ். சிவசுப்பிரமணியம் —

அண்மையில் கொழும்பு கிறிஸ்தவ வாலிப சங்கத்தின் விவாத அரங்கு விருந்திலே திரு. வில்மட் பெரேரா பேசியவை இந்நாட்டின் பல முக்கியமான விஷயங்களைப் பற்றியனவாகும். இலங்கையில் புகுத்தப்பட்டுள்ள பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அரசாங்கமுறை மொழிப் பிரச்சினை, அவசர காலம், அரசியல் சட்டம், கமிட்டி முறை இவைகளைப் பற்றி அவர் பேசியிருக்கின்ருர்.

"கபினெட்" மந்திரிசபை முறை உள்ளிட்டு பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அரசாங்கமுறை இலங்கைக்கு உகந்தது அல்ல என்று திரு. பெரேரா கூறியதைப் பலரும் ஒப்புக் கொள்வர். காலம் சென்ற திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா உள்ளிட்டுப் பல முக்கிய அரசியல் தலைவர்களும் "கமிட்டி" முறையே சிறந்ததென்றும் கருத்துத் தெரிவித்திருக்கின்ருர்கள். அரசியல் திருத்தம்பற்றிப் பரிசீலனை செய்ய நியமிக்கப்பெறும் பார்லிமெண்ட் கமிட்டியில் திரு. பெரேராவின் மேற்குறித்த பல யோசனைகளும் பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

மொழிகள் விஷயமும் அதே பார்லிமெண்ட் கமிட்டியினல் ஆலோசிக்கப்பட வேண்டும். ஆங்கிலமும் தமிழும் கூட்டு மொழிகளாகச் செய்யப்பட வேண்டும் என்று திரு. பெரேரா கூறியுள்ள யோசனையில் சில நன்மைகள் உண்டு. தேசிய ஒற்றுமையை அது வளர்க்கக் கூடியதுடன் நேர்மையானதும் அரசியல் தீர்க்க தரிசனம் உள்ளதுமாகும். அவ்வித நடவடிக்கை சமூக வேற்றுமைகளை ஓரளவு குறைப்பதுடன், தேசிய ஒற்றுமைக்கு அவசியமான சமூக ஒத்துழைப்பையும் ஏற்படுத்த உதவும்.

அவசரகாலத்தை நீடிப்பதைப்பற்றிப் பார்லிமெண்டில் நடந்த விவாதத்தில் சபை முதல்வர் திரு. சி. பி. டி' சில்வா வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலைமைஅமை

---

பெயர்க்க ஒழுங்கு செய்துள்ள போது, பொது மக்களின் நன்மை கருதி சபை நடவடிக்கைகளை மூன்று மொழிகளிலும் வெளியிட ஒழுங்கு செய்ய வேண்டும். இதற்குக் கொஞ்சம் கூடுதல் செலவாகலாம். என்ருலும் பொதுஜன நன்மையைக் கவனிக்குமிடத்து இந்தச் செலவு அவசியமானதே.

தடுப்புக்காவலிலிருக்கும் தமிழரசு எம். பி.க்களை விடுதலை செய்யவேண்டுமென்று ஜனப்பிரதிநிதிகள்சபையிலும், செனட் சபையிலும் பல மெம்பர்கள் சரியாக வற்புறுத்தினர். அவர்கள் இல்லாமல் நீடித்து சபையை நடத்துவது ஜனநாயகத்துக்கு இழுக்கென்றும் சுட்டிக்காட்டினர். இம்மாதத்துக்குள் பலர் விடுதலை செய்யப்படுவரென்று அரசாங்கத்தின் சார்பாக பதிலளிக்கப் பெற்றது. தடுப்புக்காவலிலுள்ள பொது மக்களின் பிரதிநிதிகள் அனைவரும் வெகு சீக்கிரத்தில் விடுதலை செய்யப் பெற்று, அவர்களும் பார்லிமெண்ட் சபை மூலம் தங்கள் தேசிய கடமையைச் செய்யவும், இங்கு ஜனநாயகம் வெற்றி பெற்று நாடு அமைதியாக முன்னேறவும் வழி செய்யப் பெறுமென்றே நம்புகிறோம்.

தியாக இருந்தாலும் சகஜநிலை ஏற்படவில்லையெனக் கூறியதாகத் தெரிகிறது. நியாயமான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட அரசியல் முதலிய பல முறைகளால் சமூக ஒற்றுமையை ஏற்படுத்துவதே சகஜநிலை ஏற்பட மிகச் சிறந்த வழியாகும். நாட்டிலே இரு தேசிய மொழிகள் வழங்கப்படுகையில், அதில் ஒன்றுமட்டும் ஒரே அரசாங்க மொழியாக அறிவிக்கப்படுவது தெரியாமலோ தெரிந்தோ எடுக்கும் வேற்றுமை நடவடிக்கையாகும். இதனல் மக்களும் நாடும் பிளவுபட ஏதுவாகிறது.

சம்பந்தப்பட்ட சகலராலும் இதற்குமுன் பல தவறுகள் செய்யப்பட்டுள்ளன. அதனல் தான் இந்த நாடு இன்று இந்த துரதிருஷ்ட நிலையல் இருக்கின்றது. இன்று நாடு உள்ள சங்கட நிலைமையைப் பற்றி இலங்கை மக்களின் எந்தப் பிரிவினரும் விவேகத்துடன் தங்களைப் பாராட்டிக் கொள்ள முடியாது. இது வரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ள பார்லிமெண்ட்டுக்கு உள்ளும் வெளியிலும் உள்ள எந்தப் பிரிவினரோ, அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ வீண் கௌரவங்களைக் கொண்டு குறுக்கே நிற்கமாட்டார்கள் என்றே கருதப்படுகிறது. நிலைமையைப் பூராவும் புதிதாகப் பரிசீலனை செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது. இறந்தகாலம் செத்துவிட்டதால் அதை நாம் அதிகம் வற்புறுத்தாமல், இப்போதுள்ள நிலைமையையும் எதிர்காலத்தையும் பற்றியுமே யோசிக்க வேண்டும். இறந்த கால அனுபவங்கள் சில சமயம் வழிகாட்டி எச்சரிக்கை செய்வதாக இருப்பினும் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலுமே நாடு வாழ வேண்டியிருக்கிறது.

அரசியல் சட்டத்தை மாற்றுவதற்காக பார்லிமெண்டரி கூட்டுக் கமிட்டி நியமிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் சரித்திரத்தில் மிக முக்கியமான காரியமாகும். இதனல் மிக முக்கியமான பலாபலன்கள் ஏற்படலாம். இலங்கையின் அரசியல் சட்டத்தைத் திருத்த ஒரு அரசியல் நிர்ணய சபையை நியமிப்பது பெரிதும் விரும்பத்தக்கதாகும். இதைப் பற்றித் தீர்காலோசனை செய்ய வேண்டும். இவ்விஷயம்பற்றி பார்லிமெண்ட் அரசியல் ஸ்தாபனங்களும், கட்சிகளும் மற்ற ஸ்தாபனங்களும் ஆலோசனை செய்வது ஒரு பெரிய தேசிய சேவையாகும். இப்போதுள்ள இலங்கையின் அரசியல் சட்டம் அந்நியர் குறுக்கீட்டின் பலனேயன்றி இலங்கைப் பொது மக்களால் தயாரிக்கப் பட்டதல்ல. ஆகவே அந்நியர் குறுக்கீடின்றி இலங்கைக்குத் தகுதியானதும் தேவையானதுமான ஒரு அரசியல் சட்டத்தைத் தயாரிக்க இலங்கையிலுள்ள எல்லா சமூகத்தினரும் பிரிவினரும் சேர்ந்து கூட்டு முயற்சி செய்வதற்கு இதுசரியான சமயமாகும்.

தேசிய ஒற்றுமை ஏற்படுத்தும் வேலை மிக அவசரமானது. இதன் வெற்றிக்கு மகாநாடுகள், கமிட்டிகள், பிரசாரம் முதலிய பல தகுந்த நடவடிக்கைகளும் அவசியமாகும். பிரதம மந்திரியும் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த மற்றத் தலைவர்களும், திரு. டட்லி சேனநாயக்கா, டாக்டர் என். எம். பெரேரா, திரு. கெனமன் போன்ற அரசியல் தலைவர்களும், மற்ற அரசியல் அல்லது அரசியல் கலப்பற்ற தலைவர்களின் உதவியுடன் முயற்சி எடுக்க முன்வர வேண்டும். மேன்மை தங்கிய கவர்னர் ஜெனரலின் மேலான அநுபவமும் சாதுர்யமும் இதற்குக் கிடைக்குமென்பதில் சந்தேகம் இல்லை. இவ்வித தலைவர்கள், அவர்களுடைய சகாக்கள், பத்திரிகைகள் இவர்களது முயற்சி இன்றி இவ்விஷயத்தில் மற்றவர்கள் முன்வந்து முயற்சி எடுப்பது கஷ்டமாகும். இவ்வித முதல் முயற்சிகள் எடுக்கப்படுமாயின் நாடு இதை வரவேற்று பெரும் வெற்றியும் ஏற்படும். இலங்கையும் ஒரு மகத்தான சுபிட்சமான ஐக்கிய தேசமாகப் பொலியக்கூடும்.

இந்தியா, இலங்கை முதலிய பல ஆசிய நாடுகளின் பேரன்பரான காலஞ் சென்ற ஸ்ரீமதி அன்னி பெசன்ட் அம்மையார் எழுதியுள்ள கீழ்க்கண்ட கருத்துக்கள் இச்சந்தர்ப்பத்தில் சிறப்பாகக் கவனிக்கத் தக்கனவாகும்:

நாடு இலட்சிய நாடாக உருவாக்கப்பட வேண்டும். ஆனல் அப்படி உருவாகுவதற்கு முன்னரேயே ஒரு இலட்சிய நாடு எப்படி இருக்க வேண்டும் என்பதை மக்கள் எல்லோரும் உணரும்படி எடுத்துரைக்க வேண்டும். நல்ல நாடு எப்படி உருவாக வேண்டும் என்பதை மக்கள் உள்ளத்தில் நன்கு பதியும் வண்ணம் எடுத்துச் சொல்ல வேண்டும். இதுவே சரித்திரம் எமக்குத் தரும் பாடம். சிந்தனையாளர்கள் இலட்சியத்தைப் படைத்துத் தருகின்றனர். பேச்சாளர்கள் அந்த இலட்சியத்தைப் பொது மக்களிடையே பரப்புகின்றனர். அரசியல் ஞானிகள் செயல் முறையில் இந்த இலட்சியத்தை உருவாக்குவதற்கு முன்னரே, இலட்சிய நாடு இன்னதுதான் என்ற கருத்து சிறந்த முறையில் மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உறைந்து நிற்க வேண்டும். இதைச் செய்வதற்கு யாரும் தயங்கக்கூடாது."

காலம் வெகு வேகமாக ஓடிக் கொண்டே போகிறது. நாட்டில் மேலும் சீர்குலைவும் துன்பமும் ஏற்படா வண்ணம் தடுக்க வேண்டியது இலங்கை மக்கள் அனைவரதும் பொறுப்பாகும். நன்மையே ஏற்படும் என்று நம்புவோமாக.

---

## ஐயாறன் எழுதுவது

நேற்றுக் காலை ஒரு புலவர் வந்தார். கீழ்க்கண்ட இரு பாடல்களைப் பாடிக் கொடுத்தார்.

"பொறுமைசால் புண்ணியனே
போதப் பணியீவீர்
வறுமை நோய் வாட்டயான்
வந்தேனே – கறுமியென்
எட்டுக் குழந்தைகளும்
என்னரிய நாயகியுங்
கட்டமுறுகின்றனரே காண்.

* * *

வேலைதனை இழந்து
வேதனையாற் துஞ்சுகின்றேன்
வேலை கொடுத்தெந்தன்
வேதனைதீர் – சீலமுளாய்
ஈழநாடென்னு மிதழ்
என்ஞான்றும் மிக்கொளிர
ஆழப் பணிபுரிவேன் ஆண்டு.

* * *

இதைப் படித்ததும் மனம் வேதனையடைந்ததுடன், பழைய காலப் புலவர்களை நினைவூட்டியது. தமிழ்ப் புலவரென்ருல் தரித்திரமும் கூடப் பிறந்துவிடுமோ என்னவோ! உலகம் எவ்வளவோ வேகமாக மாறியும்கூட நம்புலவர்களின் நிலை மாறியதாகத் தெரியவில்லை!

அவர் தராதரப் பத்திரம் பெற்ற தமிழ் ஆசிரியராம். எவ்வளவோ முயன்றும் வேலை கிடைக்கவில்லை என்று கூறிய அவருக்கு ஆறுதலாகச் சில வார்த்தைகள் கூறி, சுந்தரமூர்த்தி நாயனர், திருப்புகலூரில் புலவர்களுக்குப் பாடிய திருப்பதிகத்தில்,

" பொய்ம்மை யாளரைப்
பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின்
புலவீர்காள்
இம்மையே தருஞ்
சோறுங் கூறையும்
ஏத்தலாம் இடர்
கெடலுமாம்
அம்மையே சிவலோக
மாள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே"

என்பதை நினைப்பூட்டினேன். அவரும் தெய்வமே கதி என்று இருப்பதாகக் கூறினர்.

தெய்வமே உனக்குக் கண்ணில்லையா?

யார் மனதிலாவது புகுந்து இப்புலவரின் துன்பத்தை உடன் துடைக்க மாட்டாயா?

* * *

ஆபிரிக்காவிலே கொல்லப்பட்ட ஹமர்ஷீல்டைப்பற்றி,ஒரு கம்யூனிஸ்ட் பத்திரிகை எழுதியுள்ள தலையங்கத்தில், வினை விதைத்தவன் வினையறுப்பதாயும், முன்னர் லுமும்பாவைக் காப்பாற்றத் தவறி, அவர் சித்திரவதை செய்யப்படக் காரணமாக இருந்த ஹமர்ஷீல்ட் இப்போது அதன் பலனை அறுப்பதாகவும் குறிப்பிட்டிருந்தது.

முதலில் இதைப் படித்ததும் திடுக்கிட்டேன். இதுவும் ஒரு விதத்தில் உண்மை தானே. அன்றே ஐ. நா. ஸ்தாபனம் கண்டிப்பான நடவடிக்கை எடுத்திருந்தால், லுமும்பாவுக்கு அந்தக்கதி ஏற்பட்டிருக்குமா? ஆனல் ஹமர் ஷீல்டுக்கு இதில் எவ்வளவு சங்கடமோ! பல பல ஏகாதிபத்திய சக்திகள் எவ்வளவோவிதங்களில் எங்கெங்கோ புகுந்து வேலை செய்வதைப் பார்க்கிறோம்!எப்படியும் இரு நல்ல மனிதர்களான லுமும்பாவையும், ஹமர்ஷீல்டையும் உலகம் இழந்து விட்டது!

லுமும்பாவின் படுகொலைக்கு நேர்முகமான காரணமாயிருந்த ஷோம்பேயின் ஆட்டமெல்லாம் இன்னும் எவ்வளவு காலம்! அவருக்குப்பின்னிருக்கும் ஏகாதிபத்திய சக்திகள் தாங்கள் செய்த வினையை அறுப்பது எப்போதோ!

* * *

ஓர் அமெரிக்க சஞ்சிகையைப் பார்த்தேன். அணுகுண்டு யுத்த பீதி அங்குபரவி, பலரும் பாதுகாப்பு அறைகளைக் கட்டி வருவதாக படங்களுடன் அதில் செய்தி வெளியாயிருந்தது.

(4ம் கலம் பார்க்க)

## ஐயாறன்

(5ம் கலத் தொடர்ச்சி)

அணு குண்டு பாதுகாப்பு வேலைக்காக அமெரிக்க அரசாங்கம் இவ்வாண்டில் 31 கோடி டாலர், செலவிடுகின்றதாம். பாதாள பொது பாதுகாப்புகளுக்கு அரசாங்கம் 10 கோடி டாலர்செலவிடுமாம். இதைத்தவிர தனிப்பட்டவர்கள் தங்கள் வீடுகளின் சமீபமே பாதுகாப்புகளைக் கட்டிக்கொண்டு வருமுன் காப்பவர்களாக இருக்கின்றனர். பாதுகாப்புகளைக் கட்டும் இஞ்சினியரிங் கம்பனிகளுக்கு நல்ல வியாபாரம்!

நமக்கெல்லாம் இந்தக் கவலையே இல்லை!

# ஐ. நா. உதவிக்கு 14 ஜெட் போர் விமானங்கள்

## பாரததுருப்புகள் பற்றிய குற்றச்சாட்டுக்கு அதிகாரி மறுப்பு

லியப்போல்ட்வில்லி, செப். 24

கடாங்காவில் பாரதத் துருப்புக்கள் கொடூரமாக நடந்து கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டை காங்கோவிலுள்ள ஐ. நா. தலைமைப் பிரதிநிதி ஜெனரல் மக்கோவின் மறுத்துள்ளார்

ஜெனரல் மக்கோவின் கடாங்காவுக்குச்சென்றுவிட்டுஅங்கு மூன்றுதினங்கள் தங்கியபின் இன்று எலிஸபெத்வில்லியிலிருந்து லியப்போல்ட்வில்லி வந்துசேர்ந்தார்.

லியப்போல்ட்வில்லியில் பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் ஜெனரல் மக்கோவின் பேசுகையில், கடாங்காவில் பாரதத் துருப்புக்கள் கொடூரமானமுறையில் நடந்துகொண்டதாக மேற்கத்திய பத்திரிகைகள் கூறிய குற்றச்சாட்டுக்கள் சரியானவையல்ல என்று கூறினர்.

கடாங்காவில் பாரதத் துருப்புக்கள் திறமையான தலைமையின்கீழ் சிறப்பான கட்டுப்பாட்டுடன் பணியாற்றுகின்றன என்று ஜெனரல் மக்கோவின் கூறினர்.

எலிஸபெத்வில்லியில் வானொலி நிலையத்தையும் தபால் நிலையத்தையும் பாதுகாக்கும் பணியில் பாரதத் துருப்புக்கள் ஈடுபட்டிருந்த சமயம் அவர்கள் மறைந்திருந்து தாக்கப்பட்ட போதிலும், நிலைமையைப் பொறுமையுடனும் நிதானத்துடனும் பாரதத் துருப்புக்கள் சமாளித்துக்கொண்டனர்.என்று ஜெனரல் மக்கோவின் தெரிவித்தார்.

செஞ்சிலுவைச்சங்க மோட்டார்வாகனத்துக்கு பாரதத் துருப்புக்கள் சுட்டதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டு பற்றி ஜெனரல் மக்கோவின் குறிப்பிடுகையில்,செஞ்சிலுவை அடையாளம் பொறிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களில் பெல்ஜிய பாரசூட் துருப்பினர் யந்திரத் துப்பாக்கிகள் பொருத்தி ஐ. நா. துருப்புக்களைத் தாக்க ஆரம்பித்ததும்தான் பாரதத் துருப்புக்கள் திருப்பிச் சுட வேண்டியேற்பட்டது என்று கூறினர்.

"கூர்கர் துருப்புக்கள் மீது சாட்டப்படும் எக் குற்றச்சாட்டையும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்கள் சிறந்த பணியாற்றுகின்றனர். இக் குற்றச்சாட்டுகள் சேவையிலீடுபட்டுள்ள வீரர்களின் மன உறுதியைக் குலைக்கும்நோக்கமுடையவை" என்று ஜெனரல் மக்கோவின் தெரிவித்தார்.

கடாங்காவில் இடைவிடாது மறைந்திருந்து ஐ. நா. படையினரைத் தாக்கியதால் ஐ. நா. படைகளுக்குச் சிரமம் ஏற்பட்ட போதிலும் தோல்வியை ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்படவில்லை என்றும் அவர் கூறினர்.

காங்கோவிலுள்ள ஐ. நா. படைகளுக்கு உதவிபுரிவதற்காக 14 'ஜெட்' போர் விமானங்கள் வந்துகொண்டிருப்பதாகவும் ஜெனரல் மக்கோவின் அறிவித்தார்.

பணத்துக்காக வேலை செய்யும் அந்நியர் இன்னும் 104 பேர் கடாங்காவிலிருப்பதாகவும் இவர்கள்தான் கடாங்கா படைகளுக்குத் தலைமை தாங்குவதாகவும் ஜெனரல் மக்கோவின் கூறினர்.

### நமது நூல் நிலையம்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

**The Central:** Editor: V.K. Nadarajah, R. S. Perinbanayagam, Jaffna Central College, Jaffna.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆண்டு வெளியீடு, தமிழிலும் ஆங்கிலத்திலும் தரமான கட்டுரைகளைத் தாங்கி வெளியாகியுள்ளது. சாதிக் கட்டுப்பாடுகள் நாட்டில் மெல்ல மெல்லத் தளர்ந்து வருவதை திரு. ஆர். எஸ். பேரின்பநாயகம் தமது ஆங்கிலக் கட்டுரையில் விளக்கியிருக்கின்ருர். மனித வளர்ச்சியைப் பற்றியும் உயிரியலைப் பற்றியும் திரு. ஆர். கே இராஜசேனன் ஆராய்ந்துள்ளார்.

தமிழ் இலக்கியம் மாணவர்களுக்கு எவ்வாறு பயன் படவேண்டுமென்பதை திரு. வே. க. நடராசா 'நமது மாணவராகளும், இலக்கியக் கல்வியும் என்ற கட்டுரையில் கூறியுள்ளார்.

கல்லூரி மாணவர்களின் கட்டுரைகள் நல்ல முறையில் அமைந்துள்ளன. கல்லூரி நிகழ்ச்சிகளும் புகைப்படங்களும் இவ்வெளியீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன.

### 'பேசிக் கொண்டே சாவேன்'

தஞ்சை, செப். 24

"நோய் நொடியில் படுத்த படுக்கையாகக் கிடந்து சாக மாட்டேன். பொதுக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கும் போதுதான் சாவேன்" என்று ஈ. வே. ராமசாமிப் பெரியார் தஞ்சையில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

### கொழும்பு ஆஸ்பத்திரியில் ஒழுங்கு அமைப்புக்குழு: உதவி மந்திரி விஜயத்தின் விளைவு

கொழும்பு, ஞாயிறு

கொழும்பு ஆஸ்பத்திரியில் உள்ள வெளி நோயாளர் சிகிச்சைப்பகுதியில் வெகு விரைவில் ஒரு ஒழுங்கு அமைப்புக்குழு செயலாற்றிவரும். வெளி நோயாளர் சிகிச்சைப் பகுதியில் கவனிக்கவேண்டிய பொது விதிகளை இந்தக்குழு எடுத்துரைக்கும்.

சுகாதார உதவி மந்திரி திரு. ஜே. பி. ஒபயசேகரா, சிகிச்சைக்கென வெளி நோயாளிகள் சிகிச்சைப்பகுதிக்குச் சென்று அங்குள்ள திருப்தியற்ற நடைமுறைகளை நேரில் கண்டதன்பேரில் இத் திருத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

உதவிச் சுகாதார மந்திரி ஒரு சனிக்கிழமை மத்தியானம் தமது தொகுதியைச் சேர்ந்த ஒரு நோயாளரைச் சிகிச்சைக்கு எடுத்துச்சென்றிருந்தார். நோயாளி மோசமான நிலையில் இருந்தார். அந்நேரம் ஆஸ்பத்திரி கடமையேற்றிருந்த வைத்திய அதிகாரி நோயாளருடன் கடுமையாக நடந்துகொண்டதை உதவி மந்திரி கவனித்தார்.

குறிக்கப்பட்ட 'வார்ட்'டுக்குத் தலைமையாகவிருந்த தலைவி மிகவும் நல்ல சுபாவத்துடன் நடந்துகொண்டார்

சம்பவம் நடைபெற்ற அடுத்த வாரம் குறிக்கப்பட்ட வைத்திய அதிகாரி சுகாதார இலாகாவுக்கு அழைக்கப்பட்டார். நோயாளியை அழைத்துவந்தவர் உதவி மந்திரியாக இருந்ததைக் கண்ட வைத்திய அதிகாரி வியப்படைந்தார்.

மேற்படி விஷயம்பற்றி சுகாதார அமைச்சு பார்லிமெண்டரிக் காரியதரிசி, சுகாதார அமச்சு அதிகாரிகளுடனும் திரு. கோகர்லி மொராகொடாவுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். திரு.மொராகொடா சுகாதார இலாகா சீர்திருத்தக் கமிட்டியொன்றின் தலைவராகக் கடமையாற்றிவருகிருர்.

பேச்சுவார்த்தைகளின் பேரில் வெளி நோயாளிகள் சிகிச்சைப்பகுதிக்கு ஒருஒழுங்கு அமைப்புக்குழு நியமிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. மாணவ தாதிமார்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சிலர் இக் குழுவில் கடமையாற்றுவர் நோயாளரின் நிலைமைகளைப்பற்றி அறிந்துகொள்வதற்கும் மாணவ தாதிமாருக்கு இக் கடமை வாய்ப்பளிக்கும்.

## "பெண்குலம் உயர எழுத்தாளர் உழைக்கவேண்டும்"

### பாரதிவிழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், ஞாயிறு

"எழுத்தாளர்கள் எப்பொழுதும் தன்னம்பிக்கை உள்ளவர்களாகவும் சுய மரியாதையுடனும் வாழ வேண்டியது அவசியம். 'தனுவுண்டு காண்டீபம் அதன் பெயர்' என்று தன்னம்பிக்கைக்கு முக்கிய இடங்கொடுக்கிருர் பாரதியார். எழுத்தாளர்களின் முயற்சியை ஆற்றலை வியாபாரமாக்கச் சிலர் முனைகிருர்கள். இந் நிலைமைக்கு எழுத்தாளர்கள் இடமளித்தல் கூடாது. கலையிழந்த நாட்டிலே கலை சிறக்க வந்தவர்களாகிய எழுத்தாளர்கள் முக்கியமாக இளம் எழுத்தாளர்கள் இவற்றில் சிக்கிக்கொள்ளக் கூடாது".

இவ்வாறுயாழ்ப்பாணம் இளம் எழுத்தாளர் சங்க ஆதரவில் யாழ்ப்பாண மத்திய கல்லூரி மண்டபத்தில் சனிக்கிழமை மாலை நடைபெற்ற பாரதி விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. இ. மகாதேவன் குறிப்பிட்டார். சங்கத் தலைவர் திரு. எஸ். மகாலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

கவிஞர் இ. முருகையன் 'பாரதி கண்ட உவமைகள்' என்பது பற்றிப் பேசுகையில் தெரிவித்ததாவது:-

தமிழகத்தில் பல பெரியார்களுக்கும் விழாக்கள் எடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் கவிஞனுக்கென்று விழாவெடுத்தது முதலில் பாரதிக்கென்றே சொல்ல வேண்டும். கவிதை வேலையில்லாதவர்கள் செய்யும் விளையாட்டு என்றும் கவிஞர்கள் கற்பனை உலகத்தில்தான் இருப்பவர்கள் புளுகுவதுதான் கற்பனை என்றும் சிலர் குற்றஞ் சாட்டுகிருர்கள். சாதாரண மனிதனுடைய தோற்றத்துககு அப்பாற்பட்ட சரடுபோன்ற உண்மைத் தொடர்பைக் கவிஞர்கள் காண்கிருர்கள். அப்பொழுது கற்பனை வேலை செய்கிறது. இவைகளை ஒன்று சேர்த்து புது உருவத்தைப் படைக்கிருர்கள். மூலப் பொருள்கள் ஒன்ருக இருந்தாலும் கஞ்சிக்கும், பாயாசத்துக்கும்அமைப்பிலேயே வேறுபாடு தங்கியிருப்பது போல் கவிஞர்கள் கற்பனையும் மாறுபடுகின்றது. உவமை நிறைந்திருப்பதாக எதையும் சிறந்த கவிதையென்று சொல்லிவிட முடியாது. மேல் பூச்சுப்போன்ற அலங்காரங்கள்தாம் சிறந்த உவமைகளல்ல. பாரதியின் உவமைகள் கவிதையோடு செறிந்திருப்பவை. கவிதை உவமையாகவும் உவமை கவிதையாகவும் இருப்பதை அவரது கவிகளில் காணலாம்.

பழமை மரபை ஒதுக்கி மொழி வாழ முடியாது. இலக்கிய மரபுக்குப் புதுமை அவசியம். தேவையான இடத்தில் புதுமையைப் புகுத்தி கவிதைக்கு உத்வேகம் அளித்திருப்பவர் பாரதியார். மரபிலே ஊறிய உவமைகளை கவிதைகளில் தந்த பாரதியார் வேண்டிய இடத்துப் புதிய உவமைகளையும் அளித்திருக்கிருர்.

பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் 'பாரதி பார்த்த புதுமைப் பெண்கள்' என்பது பற்றிப் பேசுகையிற் கூறியதாவது:-

தாய்க்குலம் இன்று போய்க் கொண்டிருக்கும் போக்கு பாரதி விரும்பிய போக்கல்ல. இன்றைய தமிழ்ப் பெண்கள் வாழ்வு கண்டிக்கப்பட வேண்டிய நிலையிலுள்ளது. எல்லாத் திறனையும் இழந்த இனமாகப் பெண்ணினம் இருக்கிறது சமூகத் தாக்குதல்களுக்கெல்லாம் அசைந்து கொடுக்கும் சருகாக பெண்குலம் இருக்கிறது. சுதந்திர நெறியில் அன்பும் அறனுமுடைய எளிமையான வாழ்வைக்கொண்டதான பெண்குலத்தைச் சிருஷ்டிப்பதில் எழுத்தாளர்கள் முயற்சியெடுக்க வேண்டும். இன்றைய தசையும் தோலுமாக இருக்கும் அவமானத்தை போக்க எழுத்தாளர் முன்வர வேண்டும். நல்ல சமுதாயத்தை உருவாக்கப் பாரதி கண்ட புதுமைப்பெண்களைப் படைப்பது இன்றைய நிலையில் மிக அவசியம். இதற்கு விளைநிலங்களாக இருக்கும் பெண்கள் பண்பும் ஒழுக்கசீலமும் படைத்தவர்களாக வாழ வழிவகுக்கப்பட வேண்டும்.

பாரதி யார்?என்பதுபற்றிய கருத்தரங்கத்தில் அறுவர் பங்கு பற்றினர்.

திரு. எஸ். பரமேஸ்வரன் நன்றியுரை கூறினர்.

## அடுத்த வரவு செலவுத் திட்டம் தமிழில் வருமா?

### மாநகரசபை எதிர்நோக்கும்பிரச்னை

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாநகர சபையின் அடுத்த வரவு செலவுத் திட்டம் தமிழில் சமர்ப்பிக்கப்படுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது. ஆனல் இம்முயற்சி இவ்வளவு தூரம் பூரணத்துவம் பெறுமென்பது தெரியவில்லை.

மாநகரசபையின் அடுத்த வரவுச் செலவுத் திட்டம் தமிழில் இல்லையேல் தாங்கள் சபையிலிருந்து வெளியேறப் போவதாக அங்கத்தவர் சிலர் தெரிவித்திருக்கிருர்கள். அத்துடன் இந்த வரவு செலவுத் திட்டம் தமிழிலேயே சமர்ப்பிக்கப்பட வேண்டுமென மாநகரசபையிலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஆனல் நிர்வாகம் முழுவதையும் தமிழில் நடத்துவதிலுள்ள கஷ்டங்களை அண்மையில் கமிஷனர் ஓர் அறிக்கை மூலம் தெரிவித்திருக்கிருர். தமிழ் மொழி பெயர்ப்பாளர்களோ தமிழ்த் தட்டெழுத்தாளர்களோ இல்லாதநிலையிலும் பல்வேறு இலாகாக்களிலும ஆங்கிலத்திலேயே தமது பகுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு மொழிபெயர்ப்புக்கு வருவதாகத் தெரிகிறது.

மாநகர சபைக் கணக்காளர் பகுதியில் கணக்குப் பரிசோதனை மா அதிகாரியினுடையவும் உள்ளூராட்சி ஆணையாளருடையவும் அனுமதியின்றித் தமிழ் மொழியில் நிர்வாகத்தை நடாத்த முடியாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வரவு செலவுத் திட்டம் தமிழில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்ற சபையின் தீர்மானம் இவ்வாண்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்படுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

## வர்த்தக சிப்பந்திகளுக்கு அதிகசம்பளம்கிடைக்கும்

### இம்மாதம் ஒப்பந்தம் கைச்சாத்தாகும்

கொழும்பு, ஞாயிறு

வர்த்தக ஸ்தாபனங்களில் வேலை செய்யும் குமாஸ்தாக்களுக்கும் கனிஷ்ட ஊழியர்களுக்கும் அதிக சம்பளம் கிடைக்கக்கூடிய கூட்டு ஒப்பந்தம் இம்மாத முடிவில் கையெழுத்தாகக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுறது.

சுமார் ஏழுமாதகாலத்துக்கு மேலாக நடைபெற்றுவந்த பேச்சு வார்த்தைகளின் பின் இலங்கை முதலாளிமார் சம்மேளனமும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கமும் பேச்சு வார்த்தைகளின் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன.

இந்த ஒப்பந்தம் கைச்சாதிடப்படுவதற்கு முன்னர் நடைபெறவிருக்கும் இறுதிப் பேச்சுவார்த்தை நாளை திங்கட்கிழமை நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தகராறிலுள்ள சகல விஷயங்களிலும் இரு பகுதியினரும் உடன் பாட்டுக்கு வந்துள்ளனராம். கைத் தொழில் ஒத்துழைப்பின் நலனை உத்தேசித்து சில விஷயங்களில் இரு பகுதியினரும் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து உடன்பாட்டுக்கு வந்ததாகவும் தெரிகிறது.

இந்த ஒப்பந்தம் கையொப்பமானதும் முதலில் இரு வருடங்களுக்கு இது அமுலிலிருக்கும்.

## சிறைச்சாலை நிர்வாகம் ஆராயுமாறு யோசனை

கொழும்பு, ஞாயிறு

சிறைச்சாலைப் பகுதி நிர்வாகத்துக்கான கமிஷன் ஒன்றை நியமிக்கும்படி சிறைச்சாலை மேற்பார்வை ஆலோசனைக் குழு உள்நாட்டமைச்சரைக் கேட்டுள்ளது. இதுபற்றி உள்நாட்டு அமைச்சருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைப்பதற்கான ஒழுங்குகள் செய்வதற்கு ஆலோசனைக் குழுத் தலைவர் திரு. ஹேமாடபாரே விசேஷ கூட்டம் ஒன்றை ஏற்படுத்தினர். சிறைச்சாலைக் கமிஷன் இங்கிலாந்திலுள்ள சிறைச்சாலைக் கமிஷனைப் போன்று இருக்க வேண்டும் என்றும் சிறைச்சாலை மேற்பார்வை ஆலோசனைக்குழு சிபார்சு செய்துள்ளது.

## மௌலானு விளையாட்டுக்கழக நிர்வாகிகள்

காத்தான்குடி, சனி

காத்தான்குடி மௌலானு விளையாட்டுக் கழகத்தின் புது வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:

'ஏ' பிரிவுக் கோஷ்டி: தலைவர்: ஜனுப் பி. எம். சக்காப். உப தலைவர்: எம். எம். ஏ. அசீஸ். காரியதரிசி: எம். கே. ஜெயினுலாப்தீன்.

'பி' பிரிவுக் கோஷ்டி: தலைவர்: ஜனுப் எம். எம் இஸ்மாயில். உப தலைவர்: எம். கே. மஹ்றூப். காரியதரிசி கே. எம். இக்பால்.

## மட்டக்களப்பு பகுதியில் நல்ல மழை

அக்கரைப்பற்று, சனி

கல்லோயாப் பள்ளத்தாக்கு உட்பட மட்டக்களப்பு மாவட்டம் பூராவும் தற்போது நல்ல மழை பெய்துகொண்டுவருகிறது. இதனுல் வரட்சி நீங்கியுள்ளது.

இப்பகுதியில் இடையிடையே பலத்த காற்று வீசி சேதத்தையும் ஏற்படுத்துகிறது.

---

'ஸி' பிரிவுக் கோஸ்டி: தலைவர்: ஜனுப் எம். இஸ்மாயில் உப தலைவர்: கே. எம். முகைய்தீன். காரியதரிசி: எம். எல். அப்துல்லத்தீப்.

## "சமயக் கல்வியின் அவசியம்"

காத்தான்குடி, சனி

"பகுத்தறிவுள்ள மனிதனை மிருகசுபாவத்திலிருந்து காத்து அவனது ஆசாபாசங்களை விலக்கி, புனிதத்தன்மையான தெய்வத்தன்மையை அடையச் செய்வது சமயமே. சமயக் கல்வி நல் வாழ்வு வாழ வழி செய்கிறது."

இவ்வாறு மட்டிக்கழி, ஸ்ரீ துரோபதை அம்மன் ஆலய வருடாந்த விழாவில் பேசிய பிரமச்சாரி ஸ்ரீ ஓங்காரசைதன்யர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: "சமய வாழ்வு ஒருவனைத் தூய வழுக்கி நற்கதியடையச் செய்கின்றது. சமயத் தொண்டில் தேர்ச்சியும், பற்றுமுள்ள ஆசிரியர்களும், சமயத் தலைவர்களும் ஈடுபடவேண்டும். சமய போதனை வெறும் நூற் கல்வியைப் போன்றதல்ல. சமய அறிவைவிட அனுட்டானமே சிறந்தது. பாடசாலையில் மாணவர்கள் பயிலும் போதனையைச் சாதனைமூலம் பயன்படுத்தப் பெற்றோர் கவனமெடுக்கவேண்டும்."

மற்றும் பலர் பேசியபின் அருள்நெறிக் கூட்டத்தினரின் ஆதரவில் செயலாளர் திரு. வீ. கிருஷ்ணபிள்ளை கூட்டுப் பிரார்த்தனை நடாத்தினர்.

---

## தீ மிதிப்பு விழா

அக்கரைப்பற்று, சனி

பாண்டிருப்பு துரோபதை அம்மன் ஆலயத்தின் தீ மிதிப்பு விழா வெள்ளிக்கிழமை மாலை நடைபெறவிருக்கிறது. இந்த ஆலயத்தின் கொடியேற்றம் சென்ற 12-ந் திகதி நடைபெற்றது.


'சிரநேத்திராஞ்சன தைலம்'

விடுதலையளிக்கும்போது நீங்கள்

சிரசு கண் மூக்கு சம்பந்தமான வியாதிகளினல் துன்புறவும் வேண்டுமா?

தினமும் சிரசிலிருக்கும் இத்தைலத்தின் சக்தி நிறைந்த ஒவ்வொரு 20 சொட்டுப் பிரமாணமும் ஆச்சரிய பலனையளிக்கும்!

காலம் நீடித்த நோயாளர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்:

மு. க. ஜெகநாதன்

யூனனி கண் நிபுணர்

பெரியகடை யாழ்ப்பாணம்



குனேகா சென்டுகள்

வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற குனேகா மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்

தயாரிப்பவர்கள்: குனேகா அடையார் மதராஸ் 20.

இலங்கை சோல் ஏஜண்டுகள்: ஜெகஜோதி அன் கோ, குருநெனியா.


## வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்

(வரைவுள்ளது)

**1933ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.**

30 வயதுக்கு மேற்படாத சகல பாடசாலைகளிலுமுள்ள நிரந்தர ஆசிரியர் எவரும் அங்கத்தவராய்ச் சேரத் தகுதியுடையர்.

அங்கத்தவராகச் சேராதிருப்பவர்கள் சேர்ந்து தங்களுக்கும் தங்களில் தங்கியிருப்பவர்களுக்கும் சேமிப்பைத்தேடவும்.

அங்கத்தவராகச் சேர விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்தில் உரிய பத்திரங்களையோ தகவல்களையோ பெற்றுக் கொள்ளலாம்.

**1-1-61ல் அங்கத்தவர்கள் தொகை - 963**

**1-1-63ல் இருப்பு ரூபா 2,90,535/67**

**1960ல் இறந்த அல்லது இளைப்பாறிய அங்கத்தவர்களுக்குச் சகாயமாக உதவிய தொகை - 23,115/50**

**1960ல் இளைப்பாறிய ஒருவர் பெற்ற தொகை:**

| பெயர். | வகுப்பு. | திருப்பிக்கொடுத்த கட்டணப் பணம். ரூ. ச. | சகாயம். ரூ. ச. | மொத்தம். ரூ. ச. |
|---|---|---|---|---|
| என். ஏச். பேரின்பநாயகம் | 1 | 1092 00 | 2221 00 | 3313 00 |

**1960ல் இறந்தவர் ஒருவர் பெற்ற தொகை:**

| பெயர். | வகுப்பு. | திருப்பிக் கொடுத்த கட்டணப் பணம். | சகாயம். | மொத்தம். |
|---|---|---|---|---|
| பி. இராமுப்பிள்ளை | 1 | 201-58 | 2592-00 | 2793-58 |

காரியதரிசி

வட மாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்

19, பழம் ரோட்டு, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

# பல்கலைக்கழகத்தில் வர்த்தகக் கலைப் பயிற்சி ஏற்படுத்தவேண்டுமென வர்த்தகமன்றம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

"நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்யும் நோக்கத்துடன் அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. வர்த்தக ஸ்தாபனங்கள் யாவும் தேசியமயமாக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் பல துறைகளிலும் கல்வி பயிலுவதற்கென, வெளிநாடுகள் செல்லும் மாணவர்களுக்கும் அரசாங்கம் தடை விதித்துள்ளது. தொழில் நுட்பக் கல்விக்கு அரசாங்கம் முக்கியத்துவம் அளித்து வரும் காலத்தில் இலங்கை மக்களிடையே வர்த்தகக் கலையில் பாண்டித்தியம் பெற்றவர்கள் ஒரு சிலர் மட்டுமே உளர்."

இவ்வாறு அகில இலங்கை வர்த்தக கலா மன்றம் இலங்கைப் பல்கலைக் கழகத் துணை வேந்தருக்கு அனுப்பிய கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளது.

அகில இலங்கை வர்த்தக கலை மன்றம் கீழ் வரும் இரண்டு யோசனைகளையும் துணை வேந்தருக்கு அக்கடிதத்தில் தெரிவித்துள்ளது.

1— விவசாயம், விஞ்ஞானம், கலைப் பகுதி, பொருளாதாரம் ஆகிய பாடங்கள் பல்கலைக்கழகப் புகு முகப் பரீட்சைப் பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பதுபோல வர்த்தகப் பாடங்களும் (சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும்) பாடத் திட்டத்தில் இடம் பெறல் வேண்டும்.

2— பல்கலைக் கழகத்தில் பி. ஏ., பி. எஸ் ஸி. (பொருளாதாரம்) எனப் பல துறைகளிலும் தராதரப் பயிற்சியளிக்கப்படுவதுபோல் வர்த்தக பாடங்களிலும் பி காம், எம் காம். ஆகிய துறைகளிலும் பல்கலைக்கழகத்தில் தராதரப் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இக் கோரிக்கை இரண்டையும் பற்றி ஆலோசனை செய்து அவற்றை ஆதரிக்குமாறு அகில இலங்கை வர்த்தகக் கலை மன்றம் பல்கலைக்கழகத் துணை வேந்தரைக் கேட்டுள்ளது.

---

## 'பக்தி வளர அறிவு வேண்டும்'

### நாரந்தனையில்மணிபாகவதர்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

"இன்று கடவுள் இல்லை என்கிறார்கள். ஆனல் வள்ளுவனுக்கு விழாவெடுக்கிறார்கள். வள்ளுவர் 'கற்றதனால் ஆய பயன் என் கொல் வாலறிவன் நற்றாள் தொழாரெனின்' என்று கூறுகிறார். எனவே வள்ளுவரைப் புரிந்து கொள்ளாது விழாவெடுப்பதால் பயன் என்ன? அறிவும் பக்தியும் ஒருங்கே வளர வேண்டும் இதனலேயே நம்மவர்கள் ஆலயம் கட்டிய இடத்தில் வித்தியாலயமும் கட்டினர். ஆனல் இன்றோ அறிவின் முதிர்ச்சி பக்தியைப் போக்கி விடுகிறது. இது தவறு. அறிவால் பக்தி வளர வேண்டும்."

இவ்வாறு சென்ற செவ்வாய்க்கிழமை நாரந்தனை-வடக்கு தான்தோன்றி ஸ்ரீமனோன்மணி ஆலயத்தில் 'பொய்யாமொழிப் புலவர்' என்னும் பொருள் பற்றிக் கதாப்பிரசங்கம் நிகழ்த்துகையில் வண்ணை - முத்தமிழ் மணி, திரு. எஸ். எஸ். மணி பாகவதர் குறிப்பிட்டார். மேலும் அவர் பேசியதாவது:

"சக்தியின்றி உலகம் இயங்குவதில்லை. எதற்கும் இன்று சக்திபற்றிப் பேசுகிறோம். அணுசக்தி, ஆயுதசக்தி இவை அழிக்கும் சக்திகள். ஆனல் தமிழர் தம் வாழ்க்கையோடு இறைவனைப் பிணைத்து வாழ்ந்தனர். வீரத்துக்கு தூர்க்கா சக்தியையும், கலைக்கு சரஸ்வதியையும், திருவுக்கு இலக்குமியையும் கொண்டு வழிபட்டு வாழ்ந்தார்கள். இவை எல்லாம் ஒன்றுகி பிணி தீர்க்கும் மாமருந்தாய் மனோன்மணியைச் சொல்லலாம்.

"தன்னிலமை மன்னுயிர்கள் சாரஞ்தரும் சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" என்றவாறு சக்தி வேறு சிவம் வேறல்ல. ஆணையும் பெண்ணையும் இணைத்து பெண்ணுக்கு, சக்திக்கு உயர்ந்த இடம் அளித்துக்கௌரவித்தது நமது சைவசமயம்."

## மத்திய பிரதேச அரசாங்கம்

### நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி

புதுடில்லி, செப். 22

டாக்டர் கட்ஜுவை முதன் மந்திரியாகக் கொண்ட மத்திய பிரதேச அரசாங்கத்தின் மீது எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் இரண்டு நாள் விவாதத்தின் பின் இன்று தோற்கடிக்கப்பட்டது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் எதிர்க்கட்சியினரின் தேர்தல் தந்திரம் என்று டாக்டர் கட்ஜு விவாதத்திற்குப் பதிலளிக்கையில் கூறினர்.

---

## போர்ச்சுக்கலில் பொருளாதார நெருக்கடி

லண்டன், செப். 22

போர்ச்சுக்கல் தனது ஆதிக்க நாடுகளில் படை நடவடிக்கைகளுக்காக அதிகம் செலவிட நேரிட்டுள்ளதால் பேராச்சுக்கலில் இப்பொழுது பெரிய தொரு பொருளாதார நெருக்கடி உருவாகிக்கொண்டிருப்பதாக போர்ச்சுக்கல் பொருளாதார நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

---

## ராக்கட் பரீட்சை வெற்றி

மாஸ்கோ, செப். 14

சோவியத் யூனியன் மற்றொரு பலகட்ட ராக்கட்டை பசிபிக்கில் பரீட்சித்துள்ளது. இம் மாதம் 23ந் திகதி முதலாவது பலகட்ட ராக்கட்டைப் பரீட்சித்த ரஷ்யா சென்ற வியாழக்கிழமை தனது மூன்றுவது பலகட்ட ராக்கட்டைப் பரீட்சித்ததாகவும் பரீட்சை வெற்றியளித்ததாகவும் சோவியத் 'செய்தி' ஸ்தாபனமான 'டாஸ்' அறிவித்தது.

---

## ஹமர்ஷீல்ட் நினைவு

### சுவீடன் ஸ்காலர்ஷிப் நிதி ஏற்படுத்தியது

ஸ்டாக்ஹோம், செப். 22

காலஞ்சென்ற திரு. ஹமர்ஷீல்டின் நினைவாக ஸ்காலர்ஷிப் நிதியொன்றைசுவீடன் அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. சர்வதேச ஒத்துழைப்பை ஏற்படுத்தும் நோக்கமாக ஏற்படுத்தப்படும் இந்த ஸ்காலர்ஷிப் நிதி சுவீடன் மாணவர்கள் மேம்பாடு குறைந்த நாடுகளுக்குச் செல்வதற்கு உபயோகிக்கப்படும்.

## தேசியவருமானம் அதிகரிப்பு

கொழும்பு, வெள்ளி

603 கோடி ரூபாயை இலங்கை, 1960-ம் ஆண்டின் தேசியவருமானமாகப் பெற்றுள்ளது. 1959-ம் ஆண்டில் 575 கோடி ரூபாயே தேசிய வருமானமாகக் கிடைத்தது. தேசியவருமானத்தை தேயிலை, ரப்பர், தேங்காய் ஆகியவற்றின் ஏற்றுமதியாலேயே இலங்கை அதிகமாகப் பெற்றுவருகிறது. 1954-ம் ஆண்டில் 475 கோடி ரூபாயையும், 1955-ல் 523 கோடி ரூபாயையும், 1956-ல் 510 கோடி ரூபாயையும் வருமானமாக இலங்கை பெற்றது. 1958-ல் 550 கோடி ரூபாயாக வருமானம் உயர்ந்தது.

உள்நாட்டிலேயே அதிக உற்பத்தி செய்யப்பட்டு உபயோகிக்கப்பட்ட விளை பொருள் அரிசியாகும்.

தேங்காய், தேங்காய் எண்ணெய், தேயிலை, புகையிலை, மீன், கைத்தொழில் உற்பத்திப் பொருள்கள் முதலிய பிற பொருள்களும் வருமானத்தை அதிகரித்துள்ளன.

உத்தியோகங்களும் வருமான அதிகரிப்புக்கு உதவியுள்ளன. 1958-ல் இவற்றால் 8 கோடி ரூபாய் அதிகமாகக் கிடைத்தது.

வருமான அதிகரிப்புக்கு அரசாங்கத்தின் உதவியும் அதிகமாகிக் கொண்டே வருகிறது. 1958-ல் ஏற்றுமதிப் பொருள்களால் 161 கோடி ரூபாயும் அரசாங்கத்தால் 63 கோடி ரூபாயும் வருமானமாகப்பெறப்பட்டன.

## ஓவியப்போட்டியில் சனசமூக நிலையங்கள் ஆர்வம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணச் சனசமூக நிலையங்களுக்கிடையே அரியாலை சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் 50 க்கு மேற்பட்ட சனசமூக நிலையங்கள் கலந்து கொண்டன. இப்போட்டியில் பரிசும் பத்திரங்களும் பெறுவோருக்கு சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு அரியாலை சனசமூக நிலையத்தில் ஓர் பரிசளிப்பு வைபவம் நடைபெற்றது. அன்று ஓவியக்கண்காட்சியொன்றும் நடைபெற்றது.

### பரிசு பெற்றோர்.

### பெரியார் திருமுகங்கள்

1. என். சண்முகநாதன், ஆனைப்பந்தி ச. ச. நிலையம், (வினோபாஜி). 2. கே. கே. வி. செல்லையா, குரும்பசிட்டி ச. ச நிலையம். (சர் பொன் இராமநாதன்). 3. ஜே. சத்தியசீலன், ஆனைப்பந்தி ச. ச. நிலையம். (காந்திஜி). 4. கே. கே. வி. செல்லையா, குரும்பசிட்டி ச. ச. நிலையம் (எஸ். ஜே. வி. செல்வா).

### இயற்கைக் காட்சி

1. எஸ். சிவபுண்ணியம், அளவெட்டி ச. ச. நிலையம் (காவடி ஆட்டம்). 2. என். சண்முகநாதன், ஆனைப்பந்தி ச. ச. நிலையம் (நீராடல் காட்சி). 3. சி. தேவராசன், அரியாலை மேற்கு ச. ச. நிலையம் (நீரோடை).

### சான்றிதழ் பெற்றோர் பெரியார் திருமுகங்கள்

1. ஆர். ஸ்ரீபாலசுப்பிரமணியம், ச. ச. நிலையம். 2. வ. நவரத்தினம். அரியாலை மேற்கு ச. ச. நிலையம். 3. எஸ். இராசேந்திரம், மோகனதாஸ் ச. ச. நிலையம், சாவகச்சேரி. 4. எஸ். தேவராஜன், அரியாலை மேற்கு ச. ச. நிலையம்.

1. இ. வேலுப்பிள்ளை, கலைமகள் ச. ச. நிலையம், வல்வெட்டித்துறை. 2. எஸ். நித்தியானந்தம், தொல்புரம் ச. ச. நிலையம்.

3. ஏ. மனுவேல் பிள்ளை, புங்குதீவு, பிரான்சிஸ் சேவியர் ச. ச. நிலையம். 4. கே. அந்தோனிப்பிள்ளை, புங்குடுதீவு ச. ச. நிலையம். 5. எஸ். வி. சுப்பிரமணியம், வல்லை ச. ச. நிலையம். 6. டி. நமசிவாயம், ஸ்ரீசுப்பிரமணிய ச. ச. நிலையம், நீர்வேலி.

இப்போட்டிகளுக்கு திருவாளர்கள் முகாந்திரம் ஈ. பி. இராசையா, டபிள்யூ. என். தேவகடாட்சம், ஆர். என். சிவப்பிரகாசம், செல்வி ஆபிரகாம் ஆகியோர் மத்தியஸ்தர்களாக இருந்தனர்.

## யாழ்ப்பாணம் வரும் மகாராஷ்டிர ஹாக்கிக் கோஷ்டி

யாழ்ப்பாணம், சனி

இலங்கை வந்திருக்கும் மகாராஷ்டிர ஹாக்கி விளையாட்டுச் சங்கக் கோஷ்டி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்யுமெனத் தெரிகிறது. யாழ்ப்பாணம் ஹாக்கி விளையாட்டுச் சங்கக் கோஷ்டியுடன் இன்று ஓர் ஹாக்கிப்போட்டியில் அது கலந்துகொள்ளும்.

## கிராம சேவகர் நியமனம்

### கட்சி யோசனை நிராகரிப்பு

கொழும்பு, வியாழன்

புதிய கிராம சேவகர் நியமனத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்படவேண்டுமென்று எம். பி.க்கள் உட்பட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பலர் தெரிவித்த யோசனையை உள்நாட்டு மந்திரி திரு. மைத்திரிபகல' சேனநாயக்கா நிராகரித்துவிட்டார்.

கிராமசேவகர்களை தெரிவுக்காக பரீட்சை இலாகா சமீபத்தில் நடத்திய பரீட்சையின் பெறுபேறுகளைக் கொண்டே கிராமசேவகர்களைத் தெரிவு செய்வதென்றும் கிராமத் தலைமைக்காரராக இருப்பவர்களுக்குக்கூட சலுகை அளிக்காமல் திறமையை அடிப்படையாகக் கொண்டே நியமனம் செய்வதென்றும் மந்திரி தீர்மானித்துள்ளார்.

## கிரிக்கட் போட்டியில் கச்சேரிக் கோஷ்டி ஜெயித்தது

மாவிட்டபுரம், வியாழன்

பொது வேலைப் பகுதிக் கோஷ்டிக்கும், யாழ்ப்பாணக் கச்சேரிக்கோஷ்டிக்குமிடையே, யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க இலாகாக்களின் விளையாட்டுச் சங்க ஆதரவில், காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை மைதானத்தில் நடைபெற்ற ஒரு "கிரிக்கட்" சுற்றுப் போட்டியில், கச்சேரிக் கோஷ்டி 2 விக்கட் 140 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

பொது வேலைப் பகுதிக் கோஷ்டி தனது முதலாம் இன்னிங்ஸில் 74 ஓட்டங்களும், இரண்டாம் இன்னிங்ஸில் 18 ஓட்டங்களும் எடுத்தன. கச்சேரிக் கோஷ்டி 1-ம் இன்னிங்ஸில் 148 ஓட்டங்களும் 2-ம் இன்னிங்ஸில் 8 விக்கட் நஷ்டத்துடன் 101 ஓட்டங்களும் எடுத்துத் தங்கள் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டன.

## 'கற்பனைஊற்றை மாணவர் பாழாக்குகின்றனர்'

காங்கேசன் துறை, ஞாயிறு

"வாழ்க்கையில் நடக்கும் சிறு நிகழ்ச்சியொன்றே போதும் ஒரு சிறு கதையின் கருவாக அமைவதற்கு. எங்கள் மத்தியில் நிகழும் இச்சம்பவங்களைக் கொண்டே எனது கதைகள் பல பிறந்திருக்கின்றன" எனக் காங்கேசன் துறை நடேஸ்வராக் கல்லூரிக் கலைக்கழக ஆதரவின் கீழ் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் சாகித்திய கழகத்தினால் பரிசு பெற்ற கதாசிரியர் டொமினிக் ஜீவா கூறினர்.

"இலக்கணத்திற்காக இலக்கியமல்ல. இலக்கியத்திற்கே இலக்கணம். சிறு கதைவளர இலக்கணத்தை வைத்துக் கொண்டு கதைகள் எழுத முற்படுவது இலக்கணத்திற்காக இலக்கியம் சிருஷ்டிப்பதையொத்தது. கதையின் ஜீவநாடி உள்ளடக்கந்தான். உருவத்திற்கு இரண்டாவது இடமே கொடுக்கப்படல் வேண்டும்" என்று அவர் சொன்னர்.

மாணவப் பருவம் கற்பனை வளமிகுந்த ஒரு பருவம். ஆனல் இன்றைய மாணவர் இப்பருவத்தைப் பாழாக்குகின்றனர். மலிவுப் புத்தகங்களாகிய துப்பறியும் கதைகள் மஞ்சள்ப் பத்திரிகைகள். சினிமா ஏடுகள் முதலியவற்றைப் படித்துக் கற்பனை ஊற்றையே அடைத்துவிடுகின்றனர்: நஞ்சாக்கி விடுகின்றனர்" என்று திரு. ஜீவா மேலும் கூறினர்.

திரு. கனக செந்திநாதன் 'கவிதைகள்' என்னும்பொருள் பற்றிப் பேசுகையில் சிறந்த கவிதைகளுக்கு வேண்டிய பண்புகள் பற்றி விளக்கினர்.

திரு. ரி. பொன்னுத்துரை கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.


# ஒரு கரண்டிபாலின் தரத்தை எந்தத் தேநீரும் மீறமுடியாது




## இலங்கைத் தேநீரை அறியும்!

இலங்கை தேநீரை அறியும்! இது "மில்க்மெயிட்"டையும் அறியும்— இந்தச் சிறந்த பால் தேநீர் பருகுவதில் இன்பத்தையும் அதிகரிக்கும். உங்களுக்குச் சிறந்த—மிகவும் சுத்தமான பால் எனத்தெரிவு செய்யப்பட்டு நெஸில்ஸ் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்டது. இது மிகவும் சிறந்த ரகமும் பணத்துக்கேற்ற நிறைந்த பெறுமதியும் கொண்டது. எப்பொழுதும் "மில்க்மெயிட்" பாலையே கேட்டுவாங்குங்கள்.



தேனீர் தயாரிப்பதற்கான ஐந்து பொன்னுன விதிகள்:

* பக்கெட்டில் அடைக்கப்பட்ட திறமான தேயிலை
* உஷ்ண தேநீர்ப் பானை
* ஒருவருக்கு ஒரு கரண்டிப் பால். பானைக்கு ஒன்று
* சுத்தமாக கொதித்த வெந்நீர்
* 3-4 நிமிடங்களுக்கு ஊற விடுதல்.

ஆனல்! "மில்க்மெயிட்" பாலை எப்போதும் மறவாதீர்கள்.




"மில்க்மெயிட் பால்" — சிறந்த பால்

## நாகேஸ்வரராவ் தொழிற்சாலை அதிபர்?

பிரபல நடிகர் நாகேஸ்வரராவ் சொந்ததில் தொழிற்சாலை கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்து வருகிருர். மேற்கு கோதாவரி மாவட்டத்தில் ஒரு மருந்துத்தொழிற்சாலையையும், நூல் மில்லையும் கட்டுவதற்கு அவர் அநுமதி கோரியுள்ளார். அவரது இந்த முயற்சியை ஆதரித்து தொழிற்சாலை அதிபர்களின் சங்கம் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளது. ஏற்கனவே மின்சார பல்பு தொழிற்சாலையை நிறுவ அவர் ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்.

---

## ஆர். ஆர். பிக்சர்ஸின் படம் ஆரம்பம்!

ஆர். ஆர். பிக்சர்ஸின் எட்டாவது தயாரிப்பின் படப்பிடிப்பு செப்டம்பர் 9-ம் திகதி மாலை விஜயாஸ்டுடியோவில் ஆரம்பமாகியது. டி. ஆர். ராஜகுமாரி தீபாராதனை செய்யும் காட்சியுடன் முதல் காட்சி படமாக்கப்பட்டது. எம். ஆர். ராதா, டி. ஆர். ராமச்சந்திரன், டி. ஆர். ராஜகுமாரி, ஸி. கே. சரஸ்வதி ஆகியோர் நடிக்கும் இப்படத்தின் கதாநாயகன், கதாநாயகி இந்த வாரம் நிச்சயிக்கப்படலாம். துறையூர் மூர்த்தி திரைக்கதை, வசனம் எழுதும் இந்தப் படத்தை ராமண்ணு டைரக்ட் செய்கிருர். கண்ணதாசன் எழுதும் பாடல்களுக்கு விஸ்வநாதன்-ராமமூர்த்தி இசையமைக்கிருர்கள்.

---

## கண்ணதாசனின் சொந்தப் படம்!

கண்ணதாசன் புதிதாகத் தொடங்கியிருக்கும்விசாலாட்சி பிலிம்ஸ் சார்பில் ஒரு சமூகப் படத்தைத் தயாரிக்கப் போகிருர். இதற்காக மூன்று பாடல்கள் பதிவாக்கப்பட்டுவிட்டன. வி. பி. ராமன் எழுதிய ஒரு கதையை அடிப்படையாக வைத்து கண்ணதாசனே திரைக்கதை, வசனம், பாடல்களை எழுதுவதுடன் இப்படத்தின் டைரக்ஷன் பொறுப்பையும் அவரே மேற்கொள்வாரெனத் தெரிகிறது.

இதில் எம். ஆர். ராதா, சந்திரபாபு, கல்யாண்குமார் தவிர இரு புது முகங்களும் கதாநாயகிகளாக நடிப்பார்கள். விஸ்வநாதன்-ராமமூர்த்தி இசையமைக்கின்றுர்கள்.

---

## விஞ்ஞானப் படத்தில்

### பத்திரிகை ஆசிரியர்

'பூமியே தீப்பற்றிக் கொள்ளும் அந்தநாள்' என்ற தலைப்பில் லண்டன் ஷெப்பர்ட்டன் ஸ்டுடியோவில் ஒரு திரைப்படம் தயாராகி வருகிறது. தொழில் முறையிலும் ஒரு பத்திரிகை நிருபரின் வாழ்க்கையை அணுகுண்டு சோதனைகள் எப்படிப் பாதிக்கின்றன என்பதுதான் இப் படத்தின் பிரதான கதையம்சம். இருபத்தைந்து ஆண்டுகளாகப் பத்திரிகை ஆசிரியாக இருக்கும் இருஸ்டியன்கென் இப்படத்தில் ஒரு கதாபாத்திரமாக நடிப்பதோடு, தொழில் நுணுக்க ஆலோசகராகவும் பணியாற்றுவார்.

---

## தெலுங்கில் 'தேன்நிலவு'

சித்ராலயா தயாரித்து இந்த மாதம் திரைக்கு வரும் 'தேன்நிலவு' தமிழ்ப் படத்தை அதன் தயாரிப்பாளர்—டைரக்டர் ஸ்ரீதரின் சகோதரர் பாஸ்கர் தெலுங்கில் 'டப்' செய்து வருகிருர். இந்தப் படம் அடுத்தமாதம் திரையிடப்படும்.

# கலை அரங்கம்

## 'இராமனுக்குக்கூட 14வருடங்கள் உங்களுக்கு 40ஆண்டுகளா?'

'கப்பலோட்டிய தமிழன்' படம் வேகமாக வளர்ந்து வருகிறது.

கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம்பிள்ளை சிறைவாசமனுப்பிவித்த கண்ணனூர் மத்திய ஜெயில், கோயம்புத்தூர் மத்திய ஜெயில் ஆகியவைகளில் சமீபத்தில் படப்பிடிப்பு நடைபெற்றது.

திருநெல்வேலி நீதிமன்றத்துக்குள் ஒருகூட்டம். எங்குதிரும்பினலும் சிவப்புத் தொப்பி அணிந்த பொலிஸ்காரர்தான்! வ. உ. சி. விசாரிக்கப்பட்டு 40 வருட ஆயுள் சிறைத்தண்டனை பெறுகிருர். அவர் கையில் விலங்கிடப் பெறுகிறது. இரும்புத் தொப்பி அணிந்த பொலிஸ்காரர் வீரர் சிதம்பரனுரை அழைத்து வருகிருர்கள்.

ஒரு புறம் உலகநாதபிள்ளை, சுப்ரமண்யசிவா, சிதம்பரம் பிள்ளையின் தம்பி. மறுபுறம் "தம்பி சிதம்பரம், சிதம்பரம்!" என்று அலறும் சிதம்பரத்தின் தாயார்.

"அத்தான்" என்று ஒரு குரல்! வாயைப் பொத்தியபடியே குமுறினள் சிதம்பரம் பிள்ளையின் மனைவி. "அண்ணு! அந்த ராமனுக்குக்கூட 14 வருஷங்கள் தானே. அண்ணு, உங்களுக்கு நாற்பது ஆண்டுகளா? கொடுமை, ஐயோ கொடுமை!" என்று அலறினுர் சிதம்பரத்தின் தம்பி. மறுகணம் ஒரு முரட்டுக் கை அவரை தூரத் தள்ளியது.

சிதம்பரனுரின் முகத்தில் ஒரு புன்னகை. அவ்வளவுதான்! ஒரு கணம் நின்று மனைவியைப் பார்த்தார். பெருமூச்சு விட்டு மனதைத் திடப்படுத்திக்கொண்டு கம்பீரமாக நடந்து சென்றுர்.

சிவாஜிதான் சிதம்பரனுர். நாகையா, டி. கே. சண்முகம், கண்ணும்பா, ராதாபாய், குமாரி ருக்குமணி ஆகியோர் இதில் நடித்தனர்.

---

## கல்கத்தாவில் கலை விழா

### சார்லி சாப்ளினும் வருகிருர்

நவம்பர் மாதம் மூன்றும் திகதியிலிருந்து 12-ந் திகதி வரை கல்கத்தாவில் தாகூர் நூற்றுண்டுச் சமாதான விழா நடைபெறவிருப்பதாக அறியப்படுகிறது.

இந்த விழாவில் கலந்து கொள்வதற்கு சார்லிசாப்ளின், பால்ராப்ஸன், முதலியவர்களும் ரஷ்ய எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகியோரும் வருவார்களாம்.

தமிழ் நாட்டிலிருந்து கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் கொண்ட ஒரு குழு இந்த மகாநாட்டில் கலந்து கொள்ளுமென அறிப்படுகிறது.

இந்த மகாநாட்டு நிதிக்காக நாடகம் நடத்த எம். ஆர் ராதா, எம். ஜி. ஆர்., சகஸ்ரநாமம் ஆகியோர் ஒப்புக்கொண்டிருப்பதாக அறியப்படுகிறது.

---

## பலவேஷங்களில் எம். ஜி. ஆர்.

தேவர் பிலிம்சாரது 'தாய் சொல்லைத் தட்டாதே' என்ற படத்தில் எம். ஜி. ராமச்சந்திரன் பல்வேறு வேஷங்களில் காட்சியளிக்கிருர். துரிதமாக வளர்ந்துவரும் 'தாய் சொல்லைத் தட்டாதே' என்ற படம் தீபாவளிக்கு நிச்சயம் வெளிவரும். எம். ஜி. ஆர். - சரோஜாதேவி பிரதம பாகத்தில் நடிக்கும் இப்படத்திற்கான வெளிப்புறக் காட்சிகள் விரைவில் படமாக்கப்படவிருக்கின்றன.

## பணக்கார அக்கா பானுமதி

ஏ. வி. எம். மில் தயாராகிக் கொண்டிருக்கும் ஒரு புதிய தமிழ்ப் படத்தில் பணக்கார அக்காவாக பானுமதியும் ஏழை தங்கையாக சௌகார் ஜானகியும் நடித்து வருகின்றனர். பானுமதிக்கு ஜோடியாக எஸ். ரங்காராவும் ஜானகியுடன் முத்தையாவும் நடிக்கும் இப்படத்தில் எம். எஸ். எஸ். பாக்கியம், நம்பிராஜன் ஆகியோருடன் ஹரிநாத் என்ற ஆங்கில வாலிபரும் லீலா என்ற மங்கையும் காதல் காட்சியில் நடித்து வருகின்றனர். குதிரைப் பந்தயப் பிரியராக சந்திரபாபு நடித்து வருகிருர்.

ஒரு வங்கக்கதையைத் தழுவித்தயாரிக்கப்படும் இப்படத்தை கிருஷ்ணன் - பஞ்சு டைரக்ட் செய்கின்றனர்.

---

## தீபாவளிப் படங்கள்

தீபாவளிக்கு, பின்வரும் படங்கள் திரைக்கு வருமென நம்பப்படுகிறது:

'பாக்கிய லட்சுமி', 'தாய் சொல்லைத் தட்டாதே!', 'கொஞ்சும் சலங்கை', 'கப்பலோட்டிய தமிழன்', 'நிச்சய தாம்பூலம்', 'ராணி சம்யுக்தா', 'சித்தூர் ராணி பத்மினி'.

---

நாடகம்

## எழுத்தாளன் காதலி

யாழ்ப்பாணம் திருக்குறள் நாடக மன்றத்தினர் 'எழுத்தாளன் காதலி' என்னும் சமூக சீர்திருத்த நாடகமொன்றை சென்ற சனிக்கிழமை இரவு யாழ்ப்பாணம் மனோகரா தியேட்டரில் நடித்துக் காண்பித்தனர்.

---

## 'தாத்தா' ராதா

நடிகவேள் எம். ஆர். ராதா தாத்தாவானுர். படத்திலல்ல! ராதாவின் மகன் சென்ற வருடம் திருமணம் செய்து கொண்டார். அவருடைய மனைவி சென்றவாரம் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தார். ஆஸ்பத்திரியில் குழந்தை பிறந்தது. மகன் வாசு இந்த நல்ல செய்தியை 'அப்பா' ராதாவுக்கு டெலிபோனில் தெரிவித்ததும் உடனே காரில் ஆஸ்பத்திரிக்குச் சென்ற ராதா பேரப்பிள்ளையைப் பார்த்து மகிழ்ந்தார். "நான் தாத்தாவாகிவிட்டேன்" என்று மகிழ்ச்சியுடன் அடிக்கடி சொல்லிக் கொண்டார்.



## ஏ. வி. எம். படத்தில் சந்திரபாபு

ஏ. வி. எம். மில் தயாராகி வரும் இதுவரை பெரிடப்படாத சமூகப் படத்தில் இப்பொழுது சந்திரபாபுவும் நடிக்கிருர். ரெங்கராவ், முத்தையா, பானுமதி, சவுகார் ஜானகி ஆகியோர் இப்படத்தில் நடிக்கின்றனர். கிருஷ்ணன்-பஞ்சு இப்படத்தை டைரக்ட் செய்கிருர்கள்.

---

## சென்னையில்

### சர்வதேசப்பட விழா

சென்னையில் நவம்பர் 7-ம் திகதியிலிருத்து 13-ம் திகதி வரை சர்வதேசப்பட விழா கொண்டாட இந்திய அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இந்த விழாவின் போது சென்னையிலுள்ள முக்கிய தியேட்டர்களில் 35 படங்கள் திரையிடப்படும். நாள்தோறும் வெவ்வேறு படங்கள் திரையிடப்படும். இதற்கான உபகமிட்டியை அமைக்க தென்னிந்திய பிலிம் வர்த்தக சபையின் தலைவர் திரு. ஏ. எல். சீனிவாசனுக்கு அதிகாரமளிக்கப்பட்டது.

இதன்படி கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர். சிவாஜிகணேசன், என். டி. ராமராவ், சாவித்திரி, ராகினி, ஏ. பீம்சிங், கே. சுப்பிரமணியம், வி. ஸி. சுப்புராமன். பி. புல்லையா, ராமானுஜம், என். கிருஷ்ணசாமி.

---

## வரிகட்டாததால் டெலிபோன் துண்டிப்பு

கொழும்பு, ஞாயிறு

கொழும்பிலுள்ள 84 வர்த்தக ஸ்தாபனங்களில் டெலிபோன் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது.

புதிதாக விதிக்கப்பட்ட வர்த்தக லைசன்ஸ் வரி ரூ. 250 கட்டத் தவறியதன் காரணமாகவே இவ்விதம் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

தபால் தந்தி போக்குவரத்து இலாகாவினுல் எடுக்கப்பட்ட மதிப்பீட்டின்படி 407 பேர் இந்த லைசன்ஸ் வரி கட்டத் தவறியுள்ளதாகத் தெரிகிறது.

## பிரபல நடிகை மரணம்

ஹாலிவூட், செப். 23

தான் நடித்த பாத்திரங்களை விட அதிக சொகுசாக, செல்வத்தில் வாழ்ந்த ஹாலிவூட் நடிகை மேரியொன்டேவீஸ் நேற்றிரவு புற்றுநோய் காரணமாக இறந்தார்.

நியூயார்க்கில்பிறந்த டேவிஸ் தமது 16 வயதில் நடிப்புத் துறையில் புகுந்தார்.

இவரிடமிருந்த சொந்த விட்டில் 55 குளிக்கும்அறைகள் இருந்ததாம். இவர் 32 வேலைக்காரரை அமர்த்தியிருந்தாரென்ருல் இவர் எவ்வளவு சொகுசாக வாழ்ந்தார் என்பதை தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

---

## மகாராணியைச் சந்திப்பார்

லண்டன், செப். 24

இலங்கை ஜனப்பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் திரு. ஆர். எஸ். பெல்பொல எலிஸபெத் மகாராணியைச் சந்திப்பார். நாளை லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பார்லிமெண்டரி மகாநாட்டை மகாராணி திறந்து வைப்பார். அதற்குப் பின்னர் திரு. பெல்பொல ராணிக்கு அறிமுகம் செய்து வைக்கப்படுவார்.

இம்மகாநாட்டில் பிரிட்டிஷ் காமன்வெல்த் பார்லிமெண்டைச் சேர்ந்த சுமார் 2,000 பிரதிநிதிகளும், அங்கத்தவர்களும், அதிகாரிகளும் கலந்து கொள்வார்கள் எனத் தெரிய வருகிறது.

---

## அங்காராவில் விமான விபத்து

அங்காரா, செப். 24

துருக்கியைச்சேர்ந்த பிரயாணிகள் விமானமொன்று அங்காராவுக்கு அருகில் விபத்தில் சிக்கி நொருங்கியது. இந்த விமானத்தில் பிரயாணம் செய்தவர்கள் எவரும் உயிர் தப்பவில்லையாம்.


வெற்றிகரமான 4-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜிதா (மஸ்கேலியா)

நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ணு (திருகோணமலை) மொடர்ன் (பதுளை)

லக்ஷ்மி (இரத்தினபுரி) தீவொளி (நுவரேலியா)



சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
எம். ஆர். ராதா
சாவித்திரி
நடித்த

பாவ மன்னிப்பு

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 6-30 க்கும் இரவு 9-30 க்கும் சனி, ஞாயிறு பிற்பகல் 2 30

ஜெமினி கணேசன் சரோஜாதேவி
நடித்த

இல்லறமே-நல்லறம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.